# 20

# கட்டுரை மஞ்சரி

6ஆம் வகுப்புக்குரியது

வட - இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்

Bavani- Navaratnam.
Chundikuli Girls' college.

அன்பளிப்பு
யாழ் மாணவர் பிரதிநிதிகள்
குழு

CHUNDIKULI GIRLS' COLLEGE
JAFFNA

# கட்டுரை மஞ்சரி

[ 6 ஆம் வகுப்புக்குரியது ]

Arulnangai Ponnampalam

சுன்னாகம் :

வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்

பதிப்புரிமை ]　　1968　　[ விலை : ரூ. 2-60

முதற் பதிப்பு —1968

சுன்னுகம், வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகத்தினருக்காக, குரும்பசிட்டி, திரு. முத்தையா சபாரத்தினம் அவர்களால் சுன்னுகம், திருமகள் அழுத்தகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

# பதிப்புரை

மாணவர்கள் தாம், தாம் அறிந்தனவற்றைக் கிரமமாக வெளிப்படுத்தும் ஆற்றலிலேயே அவர்களின் கல்வி வளர்ச்சி தங்கியுள்ளது எனலாம். இத்தகைய கருத்து வெளிப்பாட்டுக்கு கட்டுரை ஒரு சிறந்த வாயிலாகும். ஒரு பொருளைப் பல அமிசங்களாக வகுத்து, அவை ஒவ்வொன்றையும் ஒவ்வொரு பந்தியில் அமைத்துக் கட்டுரை எழுதும் முயற்சி, பெரும்பான்மையும் ஆறும் வகுப்பிலேயே ஆரம்பிக்கப்படுகிறது. அம் முயற்சியில் மாணவர்க்கு ஊக்கமளித்தலும் வழிகாட்டலும் மிக அவசியமாகும். அதற்கு இச் சிறுநூல் உதவும் என்பது எமது நம்பிக்கை.

ஆறும் வகுப்பு மாணவர்களின் மனவளர்ச்சியையும் கிரகிக்கும் ஆற்றலையும் சொல்வளத்தையும் கருத்திற்கொண்டே இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. இதிற் கொடுக்கப்பட்டுள்ள பொருள்கள், ஆறும் வகுப்புக்குரிய தமிழ்ப் பாடநூலின் எழுத்துப் பகுதியோடு பெரிதும் தொடர்புடையன. சிறிய வசனங்களில் மிகக் குறைந்த அரும்பதப் பிரயோகத்தோடு கட்டுரைகள் எழுதப்பட்டிருப்பதனால் அவற்றை மாணுக்கர் தாமே பயிலுதல் இயலும்.

இக் கட்டுரை மஞ்சரி, ஆறும் வகுப்பு மாணவர்களின் எழுத்துப்பாடத்திற்குரிய ஒரு துணை நூல். மாணவர்கள் இதிலுள்ள கட்டுரைகளை மாதிரிகைகளாகக் கொண்டு, தம் அறிவுக்கும் கற்பனைக்கும் ஏற்ற வகையிற் கட்டுரைகளை எழுதிப் பழகுதல் நன்று.

இச் சிறுநூலை ஆறும் வகுப்பு மாணவர்களும் ஆசிரியர்களும் தக்கமுறையிற் பயன்செய்வார்கள் என எண்ணுகிறோம்.

வட—இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகத்தார்.

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | எனது புகைவண்டிப் பிரயாணம் | ... | 1 |
| 2. | மலர்கள் | ... | 4 |
| 3. | நான் ஆசையோடு வளர்க்கும் பிராணி | | 7 |
| 4. | நான் ஒரு கிளியானல்.......... | ... | 10 |
| 5. | நான் கண்ட கனவு | ... | 13 |
| 6. | தந்தைக்குக் கடிதம் | ... | 16 |
| 7. | கதை எழுதுதல் | ... | 19 |
| 8. | வகுப்புக் கதிரை (சுயசரிதை) | ... | 22 |
| 9. | எனது பாடசாலை விளையாட்டுப் போட்டி | | 25 |
| 10. | காலைக்காட்சி | ... | 28 |
| 11. | உரையாடல் | ... | 31 |
| 12. | எனது கிராமம் | ... | 34 |
| 13. | ஆசிரியருக்குக் கடிதம் | ... | 37 |
| 14. | எனது பேனை | ... | 40 |
| 15. | மழைநாள் | ... | 43 |
| 16. | திருமண நிகழ்ச்சி | ... | 46 |
| 17. | ஒரு திருநாள் | ... | 49 |
| 18. | கதையாக்கம் | ... | 52 |
| 19. | தெரு விபத்து | ... | 55 |
| 20. | உரையாடல் | ... | 58 |

SITHY VINAYAGAR LIBRARY
ERLALAI WEST
CHUNNAKAM
No. 11

# 1

## எனது புகைவண்டிப் பிரயாணம்

குறிப்புக்கள் :

1. பிரயாணஞ் செய்த நாளும் பிறவும்.
2. வீட்டிலிருந்து புறப்படல் ; புகைவண்டி நிலையக் காட்சி.
3. வண்டியிற் சென்றபோது கண்ட காட்சிகள்.
4. பிரயாண முடிவு.

சென்ற ஆண்டு இறுதியில் ஐந்தாம் வகுப்புத் தேர்வு நிகழ்ந்தது. நான் அத்தேர்விலே சிறப்பாகச் சித்தியடைந்தேன். அதனால், என் அண்ணா மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார். என்னைத் தன்னுடன் அனுரத புரத்துக்கு அழைத்துச்செல்வதாகக் கூறினார். அதைக் கேட்டபோது நான் துள்ளிக்குதித்தேன். மார்கழித் திங்கள் எட்டாம் நாள் உத்தரதேவியிலே செல்வதாக அவர் கூறினார். அந்தநாள் எப்போது வரும் என்று ஏங்கிக்கொண்டிருந்தேன். ஈற்றில் அந்நாளும் வந்தது.

அன்று அதிகாலையில் நாங்கள் பிரயாணத்துக்கு ஆயத்தமானோம். அம்மாவும் அப்பாவும் எம்மை வழி

யனுப்பி வைத்தனர். அண்ணுவுடனே நான் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை யடைந்தேன். அந்தப் புதிய புகையிரதநிலையத்தைக் கண்டு வியப்படைந்தேன்; வைத்த கண் வாங்காமற் பார்த்தேன். பிரயாணச் சீட்டுப் பெற்றுக்கொண்ட பின்னர், நாங்கள் உள்ளே சென்றோம். புகையிரதம் வருவதற்குச் சிறிதுநேரம் இருந்தது. அதனுல், அங்குள்ள பாலத்தின்மீதேறி, சுரங்கப் பாதைவழியாக, மீண்டும் மேடைக்கு வந்தோம். அப்போது புகைவண்டியின் ஊதுகுழற் சத்தங் கேட்டது. புகைவண்டி மேடையில் நின்றதும் மக்கள் பேராரவாரத்தோடு ஒருவரையொருவர் தள்ளியும் நெருக்கியும் உள்ளே சென்றனர். அவர்களிற் சிலர் வசதியான இடங்களில் அமர்ந்து புன்முறுவல் பூத்தனர். சிலர் வசதியான இடங்கிடையாமையால் முகஞ் சோர்ந்தனர். என் அண்ணு எப்படியோ வசதியான இடம் பிடித்து, என்னை யன்னல் அருகில் அமரும்படி செய்தார்.

வண்டி நீண்ட குரல் எழுப்பிக்கொண்டு புறப்பட்டது. நான் சாளரத்தின் வழியாக வெளிக் காட்சிகளைப் பார்த்தேன். தென்னஞ் சோலைகளும் பனந்தோப்புக்களும் கலந்து காணப்பட்டன. இடையிடையே நீர் நிறைந்த பசிய வயல்வெளிகள் தோன்றின. வண்டி நாவற்குழி, சாவகச்சேரி, கொடிகாமம், பளை ஆகிய நிலையங்களிலே தங்கியது. பளையைக் கடந்ததும் வண்டியின் வேகம் அதிகரித்தது. சிறிதுநேரத்தின்பின் ''அதோ பார்; பரந்தன் சோடாத் தொழிற்சாலை'' என்றார் அண்ணு. மிகப் பெரிய கட்டிடமொன்று தோன்றி மறைந்தது. அடுத்து கிளிநொச்சி, மாங்குளம் என்னும் நிலையங்களைக் கடந்து, காலை எட்டரை மணியளவிலே வண்டி வவுனியாவை அடைந்தது. நாங்கள், தாயார் கட்டித்தந்த காலையுணவை உண்டோம். பின்னர் வண்டி அடர்ந்த காட்டினூடாகச் சென்றது. குரங்குகள்

கூட்டங் கூட்டமாக மரங்களிலே தாவித் திரிந்தன. வேறெந்த மிருகத்தையும் நான் காணவில்லை. காடுகளிடையே சிறுச்சிறு வீடுகளும் பரந்த வயல்வெளிகளுங் காணப்பட்டன. வயல்களின் மத்தியிலே நீர் நிறைந்த குளங்கள் இருந்தன. அதில் அல்லியுந் தாமரையும் மலர்ந்திருந்தன. வண்டியினுள்ளே சிலர் அயர்ந்து தூங்கினர். சிலர் சிரித்துப் பேசி மகிழ்ந்தனர். சிலர் ஒருவரோடொருவர் வாக்குவாதம் புரிந்தனர். சிலர் பத்திரிகை படித்தனர். இவைகளும் எனக்குப் புதுமையாய் இருந்தன.

புகைவண்டி மதவாச்சி நிலையத்திலே சிறிது நேரந் தங்கிப் புறப்பட்டது. ''இனி, அனுரதபுரம் வந்துவிடும்'' என்றார் அண்ணா. அரைமணி நேரங் கழிந்ததும் விகாரையொன்று என் கண்ணிற் பட்டது. அனுரதபுரத்தை நெருங்கிவிட்டோம் என்று எண்ணினேன். சில நிமிடங்களில் வண்டி அனுரதபுரத்தையடைந்தது. நாங்கள் எங்கள் பொருள்களுடன் இறங்கினோம். முதன் முதற் புகைவண்டியிற் பிரயாணஞ்செய்த அனுபவம் என்னை மகிழ்வித்தது. ஆனால், விரைவிற் பிரயாணம் முடிந்துவிட்டதே என்று சிறிது துக்கமும் உண்டானது.

# 2

## மலர்கள்

குறிப்புக்கள் :

1. ஆரம்பம்.
2. மலர்கள் காணப்படும் இடங்கள்; அதன் வகைகள்.
3. மலர்களின் நிறம் : மணம் ; மென்மை.
4. மலர்கள் தாவரங்களுக்கு உபயோகமாகும் முறை.
5. மலர்களின் பிறபயன்கள்;
6. முடிபு.

இறைவன் உலகத்தையும் உலகத்திலுள்ள பொருள்களையும் படைத்தார். அப் பொருள்களுள் மரஞ் செடி கொடி என்பன ஒருவகையின. அவற்றிலே மலரும் மலர்கள் எழில் நிறைந்தவை ; மனத்துக்கு மகிழ்வு தருபவை. அவைகள் இறைவனின் புன்சிரிப்பாக விளங்குகின்றன.

பெரிய பூந்தோட்டங்களிலும் கோயில் நந்தவனங் களிலும் வீட்டு முன்றில்களிலும் வகைவகையான மலர்

களைக் காணலாம். மனோரஞ்சிதம், சண்பகம், மகிழ் போன்ற மலர்கள் மரங்களில் மலர்கின்றன. உரோசா, நந்தியாவர்த்தம், செவ்வரத்தை போன்ற மலர்கள் செடிகளிலே தோன்றுகின்றன. அவ்விருவகை மலர்களையும் கோட்டுப்பூ என அழைப்பர். மல்லிகை, முல்லை போன்றன கொடிகளில் மலரும் மலர்கள். அவை கொடிப்பூ எனப்படும். தாமரை, அல்லி, செங்கழுநீர் போன்றன நீர்நிலைகளிலே தோன்றும் மலர்கள். அவை நீர்ப்பூக்கள் எனப்படும். இம் மூவகைப்பட்ட மலர்கள் எல்லாம் அழகும் பொலிவும் நறுமணமும் நிறைந்தவை. ஆயினும் மலர்கள் எல்லாவற்றிலும் தாமரை மலரே சிறந்தது. ''பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரை''.

மலர்கள் அழகிய பல நிறங் கொண்டவை. செம்மை நிற மலரிலேயே எத்தனையோ பேதங்களுள. மஞ்சள் நிற மலர்களில் ஒன்று மற்றொன்றை ஒத்திருப்பதில்லை. உலகில் எத்தனை மலர்களுண்டோ அத்தனை நிறங்களுள. நிறத்தைப்போலவே மலர்களின் மணத்திலும் நுண்ணிய வேறுபாடுகள் உள. ஒவ்வொரு மலரும் ஒவ்வொருவகை வாசனையுடையது. அன்றியும் மலர்கள் மிகுந்த மென்மைத் தன்மையுடையன. அதனால், மலர்களைக் குழந்தைகளோடு ஒப்பிட்டுக் கூறுவார்கள்.

மலர்கள் தங்கள் அழகினாலும் வாசனையினாலும் தேனீக்களைக் கவருகின்றன. அதனால், அத்தேனீக்கள் மலர்களிலே தங்கித் தேனுண்டு களிக்கின்றன. அப்பொழுது ஒரு மலரிலுள்ள மகரந்தத்தை மற்றொரு மலரிலே சேர்க்கின்றன. இவ்வித மகரந்தச் சேர்க்கையினாலே தாவரங்களிலே காயுங்கனியும் தோன்றுகின்றன. அதனால், தாவரங்கள் உலகெங்கணும் பரவுகின்றன. எனவே, தாவரங்களின் விருத்திக்கு மலர்கள் மூல காரணமாகின்றன.

மலர்கள் மங்கலப் பொருள்களிற் சிறந்தவை. இறைவனின் திருவடியையும் திருமுடியையும் அலங்

கரிப்பன மலர்கள்; எல்லா மங்கல கருமங்களிலும் முதலிடம் பெறுவன மலர்கள்; மங்கையரையும் மைந்தரையும் திருமணவிழாவின்போது சேர்த்து வைப்பன மலர்கள். மலர்களிற் சில மருந்துப் பொருளாகி, மக்களின் நோயை நீக்குகின்றன. சில மலர்களிலிருந்து வாசனைத் திரவியம் வடிக்கப்படுகின்றது. இவ் வகையாக மலர்கள் மக்களுக்குப் பேருதவி புரிகின்றன.

மலர்களைப் பற்றிப் பாடாத புலவர்களே இல்லை. அவர்களிலே கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளையும் ஒருவர். அவர், மலர்கள் தங்கதையைக் கூறுவது போலப் பாடல்கள் பாடியுள்ளார்.

"ஈசன் அடியிற் பணிந்துநிற்போம் —அவர்
ஏந்து முடிமீதும் தங்கிநிற்போம்
பூசனை செய்யும் அடியவரின்—உள்ளம்
பொங்கு களிப்பெல்லாம் காட்டிநிற்போம்"

என்பது அப்பாடல்களுள் ஒன்று.

# 3

## நான் ஆசையோடு வளர்க்கும் பிராணி

குறிப்புக்கள் :

1. பிராணி எதுவென்பது; அதன் பெயர்.
2. அதன் தோற்றம்; பழக்கவழக்கங்கள்.
3. எனக்கும் அதற்குமுள்ள தொடர்பு.
4. அதன் சில செயல்கள்; விளையாட்டுக்கள்.
5. முடிபு.

ஒருநாள் நான் எனது அக்கா வீட்டுக்குச் சென்றேன். அங்கே அழகிய ஒரு பூனைக்குட்டி துள்ளி விளையாடித் திரிந்தது. நான் அதன்மீது ஆசை கொண்டேன். அவர் அதை எனக்கு அன்போடு தந்தார். நான் அதைத் தூக்கிச் சென்று அம்மாவிடங் காட்டினேன். அதற்கு என்ன பெயர் வைக்கலாம் என்று கேட்டேன். அம்மா, "துளசி என்ற பெயரை வை" என்றார். துளசி அழகான பெயர். அதை நான் எனது பூனைக்குட்டிக்குச் சூட்டினேன். துளசி என்ற அந்தப் பூனைக்குட்டிதான், நான் ஆசையோடு வளர்க்கும் பிராணி.

துளசி பால்போன்ற வெண்ணிறத்திலே கரிய மறைகளையுடையது. அதன் நெற்றியிலும் முதுகிலும் வாலிலும் கரியமறைகள் காணப்பட்டன. அது 'மொழு மொழு' என்று உருண்டு திரண்டு கொழுத்திருந்தது. கரிய மணி போன்ற கண்கள்; சிவந்த சின்னஞ் சிறிய வாய்; நிமிர்ந்து நின்று அசையுஞ் சின்னக் காதுகள்; பட்டுப்போன்ற மிக மிருதுவான உடல் ஆகிய இவைகள் என்னைக் கவர்ந்தன. அதற்குப் பாலுஞ் சோறும் ஊட்டியபின்னரே, நான் உணவு கொள்வேன். நான் ''துளசி'' என்று கூப்பிட்டால் அது உடனே ஓடி வரும். 'மியா, மியா' என்று கத்திக்கொண்டு என் காலைச் சுற்றும். சில சமயம் என் மடியிலேறிச் சுருண்டு படுத்துவிடும். நாயைக் கண்டவுடன் அது பயந்தோடி வந்து என்னிடந் தஞ்சம் புகும்.

ஒருநாள், துளசி கள்ளத்தனமாகப் பாலைக் குடித்து விட்டது. அம்மா மிக்க சினங்கொண்டு துளசியை அடித்துவிட்டார். பாவம் அதற்கென்ன தெரியும். அம்மா பாலை மூடியல்லவா வைத்திருத்தல் வேண்டும் என்று எண்ணி வருந்தினேன். அன்று முழுவதும் துளசியும் நானும் உபவாசம் இருந்தோம். அதன் பின்னர் எவரும் என் துளசியை அடிப்பதில்லை. காலையில் நான் பாடசாலைக்குப் புறப்படும்போது துளசியும் என்னோடு புறப்பட்டுவிடும். நான் அதனைச் செல்லமாகத் தடவிவிட்டால் அது போய்விடும். மாலையில் வீட்டுக்கு வரும்போது அது என்னை வரவேற்கும். உடனே அதனைத் தூக்கி அணைத்துக் கொள்ளல் வேண்டும். அன்றேல் அது என்னை அசையவிடாது. இரவில் எனது பக்கத்தில் அது படுத்துக்கொள்ளும். அப்போது அம்மா அருவருப்படைந்து என்னை ஏசுவார். ஆனால் எனக்கு அதன்மீது வெறுப்பில்லை; அன்போடு துளசியை அணைத்துக்கொண்டு துயில்வேன்.

குழந்தைகளைப் போலவே துளசிக்கு விளையாட்டில் விருப்பம் உண்டு. பந்தை முன்னங்கால் இரண்டி

ணூலும் உருட்டி உருட்டிப் பிடிக்கும். பந்து உருண் டோட, அதைப் பிடிப்பதற்காகத் துளசியும் பதுங்கிப் பதுங்கிச் செல்லும். ஒருநாள் என் படுக்கைக் கருகிலே பாம்பொன்று ஊர்ந்து வந்தது. அதனைக் கண்ட துளசி பேரொலி எழுப்பிச் சீறியது. அதனால், நான் திடுக் கிட்டு எழுந்தேன். ஆபத்தான நிலையை உணர்ந்து "ஐயோ, பாம்பு, பாம்பு," என்று கத்தினேன். என் கூக்குரலைக் கேட்ட அப்பா விரைந்து வந்து அப் பாம்பைக் கொன்றார். துளசிதான் அன்று என்னுயிரைக் காப்பாற்றியது. அது செய்த நன்றியை என்னால் என்றுமே மறத்தல் முடியாது.

எனது துளசி வளர்ந்து பெரியவள் ஆனாள். அவள் ஒருநாள் நான்கு குட்டிகளின் தாயானாள். சில நாள்கள் ஒரு மூலையிலே தனது குட்டிகளுடன் இருந்தாள். பின்னர் அவள் எங்குமே காணப்படவில்லை. அதனால் நான் சோகக்கடலில் ஆழ்ந்தேன். எனது துளசி என்றுதான் எனது வீட்டுக்கு வருவாளோ!

# 4

## நான் ஒரு கிளியானால்........

குறிப்புக்கள் :

1. ஆரம்பம்.
2. அழகும் சுதந்திரமும்.
3. ஒருநாள் வாழ்வு.
4. விருப்பு வெறுப்புக்கள்.
5. முடிபு.

படியாமல் விளையாடித் திரிந்ததற்காக, அப்பா என்னை அடித்தார். நான் அழுதுகொண்டு முற்றத்தில் இருந்தேன். அப்பொழுது ''கீ...கீ...கீ...'' என்று பல குரல்கள் ஒலித்தன. அண்ணாந்து பார்த்தேன். தென்னோலையில் நாலைந்து கிளிகள் இருந்து ஊஞ்சலாடின. அப்பொழுது ''நானும் கிளியானால்......'' என்ற எண்ணம் எனக்குத் தோன்றியது.

நான் கிளியானால் என்னுடல் பச்சைநிறம் பெற்றுப் பொலிவுறும். கொவ்வைக் கனிபோன்ற சிவந்த வளைந்த சொண்டு எவ்வளவு அழகுதரும். இயற்கை தந்த ஆரம் என் கழுத்தை அழகுசெய்யும். நினைத்த நேரத்தில் என்

பச்சைவண்ணச் சிறகுகளை விரித்து வானத்திற் பறப்பேன். நான் சுதந்திரமாக விரும்பிய இடங்களுக்குப் பறந்து செல்வேன். என் தோழர்களுடன் கூடி நாள் முழுவதும் விளையாடுவேன். என்னை எவருந் தடுக்க மாட்டார்கள். என் அப்பாவோ அம்மாவோ என்னைக் கண்டிக்க மாட்டார்கள்; தண்டிக்கவும் மாட்டார்கள். நான் எவருக்கும் பயப்படமாட்டேன். ஆகா! அந்த வாழ்வு எவ்வளவு இனிமை நிறைந்திருக்கும்.

காலையில் எழுந்ததும் ஒரேயொரு வேலையே எனக்கிருக்கும். அதுதான் உணவு தேடுவது. அது மிகவும் இலகுவானது. காலையில் என் தோழருடன் கனி மரங்களை நாடிப் பறப்பேன். மாமரச் சோலையிலே மாங்கனிகளைச் சுவைத்துண்பேன். இடையிடையே எனது தோழர்களுடன் அளவளாவிச் சிரித்து மகிழ்வேன். காலையுணவு முடிந்ததும் அந்த மாஞ் சோலையே எங்கள் விளையாட்டிடமாகிவிடும். சிலசமயம் எங்களுக்கிடையே பறக்கும் போட்டி நடைபெறும். எல்லோருமாகக் கிளம்பிச் சோலையைச் சுற்றி வட்ட மடித்துப் பறந்துவருவோம். சிலசமயம் பேச்சுப்போட்டி நடைபெறும். மரக்கிளையில் அமர்ந்து ஒவ்வொருவராக ''கீ...கீ...'' என்று பேசுவோம். சிலசமயம் எல்லோரும் ஒருமித்துப் பாடுவோம். எங்கள் ஆரவார ஒலியைக் கேட்டுச் சிறுவர்கள் ஓடிவருவார்கள்; எங்களைப் பார்த்து மகிழ்வார்கள். ''பச்சைக் கிளியே வா வா வா; பாலுஞ் சோறும் உண்ணவா'' என்று பாடு வார்கள். மத்தியான வேளையில் மிளகாய்த் தோட்டங் களிற் போய்ச் சேர்வோம். அந்தச் சமயத்திலேயே தோட்டச் சொந்தக்காரன் அங்கே இருக்கமாட்டான். அங்கே செந்நிறமான மிளகாய்ப் பழங்களை விரும்பி உண்போம். சிலசமயம் ஏதாவது கொறிக்கவேண்டும் என்ற ஆசை தோன்றும். உடனே நான் பயறு செழித்து வளர்ந்துள்ள இடங்களுக்குப் படையெடுப்பேன். மாலை யானதும் நான் தோழர்களை அழைத்துக்கொண்டு இருப்பிடத்திற்குச் செல்வேன்.

எப்பொழுதுமே எனக்குத் தனித்து வாழ்வது பிடிக் காது. உணவு தேடச் சென்றாலும், ஓய்வெடுத்துக் கொண்டாலும் நண்பர்களோடு சேர்ந்தே இருப்பேன். சிலர் எங்களைப் பிடித்துக் கூண்டில் அடைத்து வளர்ப்பர். அதனை நான் முழுமனத்தோடு வெறுப்பேன். ஐயோ! பாவம்! அடிமைப்பட்ட கிளிக்குச் சுதந்திரம் ஏது? எனது பரம்பரைப் பகைவன் பூனை. பூனையைக் கண் டால், நான் பறந்துவிடுவேன். இறைவன் படைத்த சிறகுகள் இருக்கும்போது எவரும் என்னைப் பிடிக்க முடியாது. அதனால், இறைவனுக்கு நன்றியுள்ளவனாய் இருப்பேன்.

நான் கிளியானால், கவலை இன்னதென்பதை யறியேன். அதனால், துன்பமும் இல்லை; துயரமும் இல்லை; ஏச்சுப் பேச்சும் இல்லை; பெற்றோரின் கண்டிப்புமில்லை; தண்டனையும் இல்லை. பூரண சுதந்திரத்தை அனுபவிக்கும் வாய்ப்பே உண்டு; கவலையற்ற ஆனந்தமே உண்டு. இவ்வளவும் நான் கிளியானாலன்றோ கிட்டும்?

# 5

## நான் கண்ட கனவு

[கனவிலே பல தொடர்பற்ற நிகழ்ச்சிகள் சேர்வதனால், அவரவர் மனப்போக்குக்கேற்பக் கனவை அமைத்துக் கொள்ளலாம். அதனாலே குறிப்புக்கள் கொடுபடவில்லை.]

நான் அடர்ந்த ஒரு காட்டின் மத்தியில் நிற்கிறேன். திக்குத்திசை தெரியவில்லை. எங்கும் இருள் கவிந்திருக்கிறது. என்னுடன் வந்த நண்பர்கள் எங்கோ மறைந்து விடுகிறார்கள். நான் தனியனாய் நிற்கிறேன். அங்குமிங்கும் பறக்கின்ற மின்மினியின் ஒளியைத் தவிர வேறொரு ஒளியையும் நான் காணவில்லை. பயத்தினால் என்னுடல் நடுங்குகிறது. வியர்வை ஆறாய் ஓடுகிறது. எங்கு செல்வது, என்ன செய்வது என்று தெரியவில்லை.

அப்போது இரு நெருப்புக் கொள்ளிகள் என்னை நோக்கி வருகின்றன. அதன் வருகையால், என்முன்னேயுள்ள செடிகொடிகள் சலசலக்கின்றன. புலியொன்று என்னை நோக்கி வருகிறது என உணர்ந்து நடுங்குகிறேன்.

பயத்தினுற் கால்போன திசையில் ஓடுகிறேன். என்ன ஆச்சரியம்! என் கால்கள் நிலத்திற் படவேயில்லை. ஆகாயத்திலே பறப்பது போல உணருகிறேன். அப்பொழுது என் முன்னே ஒளிமயமான அழகிய மாளிகை ஒன்று தோன்றுகிறது.

அந்த மாளிகையில் எவ்வித யோசனையுமின்றி நுழைந்துவிடுகிறேன். உள்ளிருந்து மெல்லிய இன்னிசை காற்றிலே தவழ்ந்து வருகிறது. ஆண்களும் பெண்களுமாகப் பலர் சேர்ந்து பாடுகிருர்கள். அவர்கள் யாரென்பது எனக்குத் தெரியாது. என்னைக் கண்டதும் எல்லோரும் எழுந்து நிற்கிருர்கள். அவர்கள் மனமகிழ்வோடு கரங்களை நீட்டி என்னை வரவேற்கிருர்கள்; என் பெயரைச் சொல்லி அழைக்கிருர்கள். இவர்களுக்கு எப்படி என் பெயர் தெரிந்தது? அதனுல், நான் வியப்படைந்து திகைத்து நிற்கிறேன்.

அப்பொழுது இரு இளம் பெண்கள் என்னை நோக்கி வருகிருர்கள். அவர்கள் என்னைப் பார்த்துப் புன்முறுவல் பூக்கிருர்கள். என்னிரு கைகளையும் பிடித்து அன்போடு அழைத்துச் செல்கிருர்கள். அவர்களோடு சென்று பெரியதொரு மண்டபத்தையடைகிறேன். அங்கே அழகிய மேசை யொன்றிற் பலவகை உணவுப் பண்டங்கள் காணப்படுகின்றன. அவற்றினைக் கண்ட என் நாவில் நீர் ஊறுகிறது. கொடிய பசியினுல் அவற்றை இரண்டு கைகளினுலும் வாரிவாரி உண்கிறேன். குடங்குடமாகத் தண்ணீர் குடிக்கிறேன். என் பசி அடங்குகிறது. அதன்பின் மகிழ்வுடன் ஆடிப் பாடுகிறேன். எனது செயல்களைக் கண்ட அப்பெண்கள் சிரிக்கிருர்கள்.

அப்பொழுது என்னை நோக்கி ஒருவன் வருகிருன். அவனை நான் கூர்ந்து பார்க்கிறேன். அவன் தலையில் இரு கொம்புகள் முளைக்கின்றன. சிறிது நேரத்தில்

ஆட்டுக்கடாத்தலையுடையவனாய் அவன் மாறுகிறான். அவனது விசித்திர தோற்றத்தைப் பார்த்துப் பெருங் குரலெடுத்துச் சிரிக்கிறேன். என் சிரிப்பொலியைக் கேட்டுப் பலர் அங்கே வருகிறார்கள். அவர்கள் எல்லோரும் ஆட்டுக்கடாத் தலையர். அதனால், நான் விழுந்து விழுந்து சிரிக்கிறேன்.

அப்பொழுது முன்னர்க் கண்ட பெண்கள் அங்கே வருகிறார்கள். அவர்கள் கைகளிலே வாள்கள் கிடந்து பளபளக்கின்றன. அவர்கள் கோபத்தோடு என் மீது வாளை வீசுகிறார்கள். ஓங்கிய அவர்கள் கைகளைப் பலமாகப் பிடித்துக்கொள்ளுகிறேன். இந்நிலையில் ஆட்டுக்கடாத்தலையர் என்னைச் சூழ்ந்துகொள்ளு கின்றனர். நான் தனியனாய் நின்று அவர்களை எதிர்த்தல் இயலுமா? அதனால், அவர்களுக்கு அகப்படாமல் ஓடு கிறேன். என்னைத் துரத்திக்கொண்டு அவர்கள் வரு கிறார்கள்; நான் காற்றாய்ப் பறக்கிறேன்.

அப்பொழுது கல்லில் அடிபட்டு ஒரு பாழ்ங் கிணற்றில் 'தொப்' என்று விழுகிறேன். அச்சமயம் 'ஐயோ, அம்மா' என்று கத்திக்கொண்டு கண் விழிக் கிறேன். நான் கண்டது கனவு.

# 6

## தந்தைக்குக் கடிதம்

குறிப்புக்கள் :

1. இடமுந் திகதியும்.
2. கடித ஆரம்பமும் சுகம் விசாரித்தலும்.
3. கடிதச் செய்தி.
4. முடிபு.

கனகசபை வீதி,
மானிப்பாய்,
20-5-68.

அன்புநிறைந்த அப்பாவுக்கு எனது தாழ்மையான வணக்கம். இங்கே அம்மாவும் அன்புத் தம்பி தங்கையரும் நானும் இறைவனின் பேரருளினுல் நலமுடையோம். அவ்வண்ணமே தாங்களும் நலமுடன் இருக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேம்.

தங்கள் அன்பான கடிதம் கிடைத்தது. தாங்கள் எழுதிய செய்தியனைத்தையும் வாசித்தறிந்து மிக மகிழ்ந்தோம். தாங்கள் எழுதியவண்ணம் என் அருமைத் தாயாரின் சொற்கேட்டு நடக்கிறேன். தாங்கள்

முன்னர் ஒரு கடிதத்தில் ''அரனை மறவேல்'', ''முயற்சி திருவினை ஆக்கும்'', ''ஒழுக்கம் விழுப்பந் தரும்'' என்று மூன்று மகா வாக்கியங்கள் எழுதியிருந்தீர்கள். அவைகளை நான் மந்திரங்களாகப் போற்றி, மனத்தில் இருத்திக்கொண்டேன். அவற்றின் பயனை நான் தெளிவாக உணரமுடிகிறது. முதலாம் பருவத் தேர்விலே பத்தாவது இடத்தைப் பெற்ற நான், கடந்த வாரம் நடைபெற்ற இரண்டாம் பருவத் தேர்வில் மூன்ருவது இடத்தை அடைந்திருக்கிறேன். மேலும் முயன்று அடுத்த பருவத்தில் முதலாமிடத்தை அடைவேன் என எண்ணுகிறேன். அன்றியும் இப் பருவத்தில் ஒழுக்கத்துக்குரிய முதற்பரிசு எனக்குக் கிடைத்திருக்கிறது. இவற்றைத் தாங்கள் வாசிக்கும் போது தங்கள் மகனைப்பற்றிப் பெருமையடைவீர்கள் என்று எண்ணுகிறேன்.

தாங்கள் சென்ற வாரம் அனுப்பிவைத்த ஆறு புத்தகங்களில் இரண்டைப் படித்து முடித்துவிட்டேன். அவற்றுள் ஒன்று ஆபிரகாம் லிங்கனைப்பற்றிய கதை. அவரது வரலாறு என் நெஞ்சை உருக்கிவிட்டது. சின்னஞ்சிறு வயதில் வறுமையின் கோரப்பிடியிற் சிக்கி அல்லலுற்ற அவர், நேர்மையோடும் பணிவோடும் வாழ்ந்து, இரவலாகப் புத்தகங்கள் பெற்றுப் படித்து முன்னேறிய கதை எம்போன்ற சிறுவர்களுக்கு நல்ல தோர் எடுத்துக்காட்டு. அப்பா, அத்தகைய பெரியார் களின் வரலாறுகளைப் படிக்கப் பேராவலுடையேன். தயைகூர்ந்து சமயம் வாய்க்கும்போது அவற்றை அனுப்பிவையுங்கள்.

என் தம்பி தங்கையருடன் மிக அன்பாக இருக் கிறேன். மாலை நேரத்தில் அவர்களுடன் சேர்ந்து விளை யாடுவதே எனது பொழுதுபோக்கு. என் சின்னத்தங்கை இப்பொழுதுதான் மெல்ல அடி எடுத்து வைத்து நடக்கத் தொடங்குகிருள். அவள் விழுந்தும் எழுந்தும் தள்ளாடித்

தள்ளாடி நடப்பதை நீங்கள் பார்த்தால் எவ்வளவு ஆனந்தப்படுவீர்கள். அவள் தனது அரிசிப்பல்லைக் காட்டிச் சிரிக்கும்போது எவ்வளவு அழகாய் இருக்கிருள் தெரியுமா? ஆனுல், பெருவிரல் சூப்புவதை மாத்திரம் விடுகிருளில்லை.

முந்தாநாள் எங்கள் வீட்டுக்குச் சிவகுரு மாமா வந்தார். அவர் என்னைக் கீரிமலைக்கு அழைத்துச் சென்ருர். நீலக்கடல் தனது அலைக்கரங்களை அடித் தடித்து ஆரவாரித்தது. இடைவிடாமல் ஒன்றின்பின் ஒன்ருக அலைகள் வெண்ணுரை கக்கிக் குதித்து விளை யாடின. அந்த மாலைவேளையிலே சூரியன் மேற்கே மறைந்த அந்தக் காட்சி இப்பொழுதும் என் கண் ணுள்ளே நிற்கிறது. அந்த நேரத்தில் மேலைவானம் போர்க்களம் போலச் சிவந்து தோன்றியது. கடலோ இரத்தக்கடலாக மாறிவிட்டது. யார் யாருக்கிடையில் இவ்வாறு பெரும்போர் மூண்டதோ என்று ஐயுற்றேன்.

அப்பா, முன்னரே சொல்லவேண்டிய ஒன்றை மறந்துவிட்டேன். சென்றவாரம் எங்கள் பாடசாலையில் விளையாட்டுப்போட்டி நிகழ்ந்தது. அன்று கீழ்ப்பிரிவுக் குரிய மூன்று நிகழ்ச்சிகளிற் பங்குபற்றினேன். சொன் ஞல், ஆச்சரியப்படுவீர்கள்! எங்கள் பாடசாலையிற் கீழ்ப்பிரிவு வெற்றிவீரன் நானே. வேறு விசேடமில்லை.

வணக்கம்.

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள மகன்,
தேவேந்திரன்

# 7

## கதை எழுதுதல்

குறிப்புக்கள் :

1. சேவல் கூவுதல் ; பொழுது மலர்தல்.
2. சேவல் மமதை கொள்ளுதல்.
3. புறாவிடம் பெருமை பேசுதல்.
4. புறாவும் சேவலும் வாதிடல்.
5. சேவல் கூவாதிருத்தல்.
6. சேவல் செருக்கழிதல்.

ஒரு வீட்டிலே சில கோழிகள் வளர்ந்து வந்தன. அவற்றுள் ஒன்று சேவல்; ஏனையவை பேடுகள். மஞ்சள் நிறச் சொண்டும் சிவப்புநிறக் கொண்டையும் வெண்ணிற உடலும் கொண்டு அச்சேவல் அழகாய் விளங்கியது. நிமிர்ந்து நின்ற வால் அதன் கம்பீரத்தைக் காட்டியது. அது தலையை நிமிர்த்தி அரசனைப்போல மிடுக்குடன் நடந்து செல்லும். இரவிலே அந்தச் சேவல் பேடுகளுடன் ஒரு மரத்திலே தங்கியது.

ஒரு நாள் அதிகாலையில் அந்தச் சேவல் எழுந்தது. தனது அழகிய வெண்ணிறச் சிறகுகளை அடித்துக் கூவியது ; அது கூவியதைக் கேட்டதும் பல சேவல்கள்

பல திக்குக்களிலிருந்துஞ் சிறகடித்துக் கூவின. தன்னைப் பின்பற்றியே ஏனைய சேவல்கள் கூவுகின்றன என்று அது எண்ணியது. அதனால், பெருமைகொண்டது. மீண்டும் மீண்டும் பல முறை கூவியது. என்ன ஆச்சரியம்! அது கூவிக்கொண்டிருக்கும்போதே கிழக்குத்திசை வெளுத்தது. மெல்ல மெல்லப் பொழுது விடிந்தது. உலகெங்கும் மெல்லிய ஒளி பரவத் தொடங்கியது. சூரியன் உதிக்கத் தொடங்கினான்.

அதனைக்கண்ட சேவல் செருக்கடைந்தது. தான் கூவித்தான் பொழுது விடிந்தது என்று அது எண்ணிக் கொண்டது; தான் கூவாவிட்டால் சூரியன் உதிக்க மாட்டான்; உலகம் இருண்டே இருக்கும் என்று நினைத்து மிக்க கருவங் கொண்டது; மரத்தைவிட் டிறங்கியது. நெஞ்சை நிமிர்த்திச் செருக்குடன் திரிந்தது. தனது அருஞ்செயலை யாரிடமாவது சொல்லவேண்டு மென்று எண்ணியது. 'யாரிடஞ் சொல்வது? பேட்டுக் கோழிகளிடமா? சீச்சீ அவைகள் எனது திறமையை அறியுமா?' என்று நினைத்துச் சிரித்தது.

அப்போது அங்கே புருக்கூட்டம் ஒன்று பறந்து வந்தது. அப்புருக்கள் குறுகுறுவென்று சத்தஞ் செய்து கொண்டு உணவுதேடின. அப்புருக்களிலொன்று சேவ லிடம் மெல்லமெல்ல நடந்து வந்தது. அது சேவலின் கம்பீரத் தோற்றத்தைக் கண்டு வியந்தது. வைத்தகண் வாங்காமற் சேவலைப் பார்த்தது. அதனைக் கண்ட சேவல், "என்ன பார்க்கிறாய்?" என்று மிடுக்காகக் கேட்டது. அதற்குப் புறா, "சேவலாரே, தங்கள் கம்பீரத்தோற்றம் என்னைக் கவர்ந்தது. அதனால் பார்க் கிறேன்" என்றது. உடனே சேவல், "அப்படியா? தோற்றத்தைக்கண்டு திகைக்கும் நீ என்செயலை அறிந் தால் இன்னும் திகைப்பாய்" என்றது. "செயற்கரிய என்ன செயலைச் செய்தீர்கள்" என்று புறா வினவியது. அதனைக் கேட்ட சேவல், செருக்கோடு, "நான் கூவித்தானே பொழுது விடிகிறது. நான் கூவாவிட்டால்

சூரியன் உதிப்பானு? இருள்தான் விலகுமா?'' என்று கூறியது. அதனைக் கேட்ட புரு சிரித்தது. சேவல் கோபத்தோடு, ''ஏன் சிரிக்கிருய்'' என்று கேட்டது. புரு, ''சேவலாரே தாங்கள் கூவித்தானு பொழுது விடிகிறது? தாங்கள் கூவாவிட்டாலும் பொழுது விடியும்; சூரியனும் உதிப்பான்'' என்று சிரித்தது. ''எப்படி நடைபெறும்?'' எனச் சேவல் ஆணவம் பேசியது. புரு, ''காலம் வந்தவுடன் சூரியன் உதிப்பான்; இருள் விலகும்'' என்றது. சேவல், ''இல்லை, இல்லை, நான் கூவித்தான் சூரியன் உதிக்கிருன். அதை நான் நேரிற்பார்த்தேன். சரி, இன்று அதிகாலையில் நான் கூவமாட்டேன். பொழுது விடிகிறதா பார்'' என்று கருவமாகப் பேசியது. புரு, ''அதையுந்தான் பார்ப்போமே'' என்று கூறிப் பறந்தது.

அன்று அதிகாலையில் அந்தச் சேவல் கூவவில்லை. கிழக்குத்திசையை நோக்கிக்கொண்டிருந்தது. பாவம்! அஃது ஏமாந்தது. கிழக்கு வெளுத்தது. சூரியன் உதித்தான். அதனைக்கண்ட சேவல் செருக்கிழந்தது. மறுநாள் புரு சேவலிடம் வந்தது. சேவலுக்குப் புருவைக் காண வெட்கமாய் இருந்தது. தொங்கிய தலையுடன் சேவல் தனது தோல்வியை ஒப்புக்கொண்டது.

# 8

## வகுப்புக் கதிரை (சுயசரிதை)

**குறிப்புக்கள் :**

1. ஆரம்பம் : கதிரையானமை.
2. வகுப்புக்கு வந்த கதை.
3. அடைந்த அனுபவங்கள்.
4. இன்றுள்ளநிலை.

இப்பொழுது எனது பெயர் கதிரை. நான் கடந்த பத்து ஆண்டுகளாக இந்த ஆறும் வகுப்பில் இருக்கிறேன். ஒவ்வோராண்டும் மாணவர்கள் இவ்வகுப்பிலிருந்து ஏழாம் வகுப்புக்குச் செல்கிறார்கள். ஆனால், எனக்கோ வகுப்பேற்றம் இல்லை. என்ன செய்யலாம்! என்னை மரம் என்று நினைத்துவிட்டார்கள்!

நான் இந்த உருவம் பெறுவதற்கு முன் பல துன்பங்களை அடைந்தேன். அவற்றைக் கேட்டால் நீங்கள் கண்ணீர் சிந்துவீர்கள். நான் கதிரையாவதற்கு முன் அடர்ந்த வனமொன்றிலே முதிரை மரமாக நின்றேன். ஒருநாள் மரந்தறிப்போர் கூரிய வாளினால் என்னை அரிந்து வீழ்த்தினார்கள். கிளைகளை வெட்டினார்கள். என் தோலை உரித்தார்கள். தாங்கமுடியாத

அத்துன்பங்களை எனது வலிமையினாலே தாங்கினேன். முதிரை மரத்துண்டுகளாய்க் கிடந்த என்னைத் தச்சு வேலை செய்பவன் ஒருவன் அரிந்தான். முழுமரம் பலபல துண்டுகள் ஆயிற்று. அவன் அந்தத் துண்டுகளை அளவாகப் பொருத்தி இப்போதுள்ள என்னைச் செய்தான். கதிரை என்று எனக்குப் பெயரிடப்பட்டது.

அந்தத் தச்சுத் தொழிலாளி என்னைக் கடைக்காரன் ஒருவனுக்கு விற்றான். கடைக்காரன் தனது தளபாடக் கடையில் என்னை வைத்தான். அங்கு என்னைப் போன்ற பலர் இருந்தனர். அவர்களிலும் பார்க்க நான் அழகும் வலிமையும் மிக்கவனாய் இருந்தேன். அங்கே எனக்கு எவ்வித வேலையுமில்லை. காலைதொடக்கம் மாலைவரை கடைவாயிலில் இருப்பேன். வீதி வழியாக மக்கள் பலர் செல்வார்கள். அவர்களிற் சிலர் நான் இருக்கும் கடைக்கு வருவார்கள். சிலர் அங்குள்ள சில பொருள்களை வாங்கிச்செல்வர். சிலர் முகத்தைச் சுளித்துக்கொண்டு திரும்புவர். அவர்களில் எவரும் என்னைத் திரும்பியும் பார்க்கவில்லை. எனக்கு இத்தகைய வாழ்க்கை வெறுத்து விட்டது. வேறெங்காவது போகவேண்டுமென்று துடிதுடித்தேன். ஒருநாள் உங்கள் பாடசாலை அதிபர் அந்தக் கடைக்கு வந்தார். அவர் என்னோடு என் தோழர் களிற் பதின்மரையும் விலைக்கு வாங்கினார். நாங்கள் எல்லோரும் வண்டியில் ஏற்றப்பட்டோம். அப்பொழுது நான் புதிய வாழ்க்கை கிடைத்துவிட்டது என மகிழ்ந்தேன். உங்கள் அதிபர் என்னையும் என் நண்பர்களையும் இப்பாடசாலைக்குக் கொணர்ந்தார். எனது முதுகில் "VI" என இலக்கமிட்டார். மறுநாட் காலையில் என்னை இந்த வகுப்புக்கு அனுப்பிவைத்தார்.

நான் இந்தப் பத்துவருடகாலத்தில் பல நூற்றுக் கணக்கான மாணவர்களைக் கண்டிருக்கிறேன். அவர் களிற் சிலர் நற்குணமுள்ளவர்கள். சிலர் மிகுந்த கெட்டிக்காரர். அவர்களைப் பார்க்கும்போது நான்

பூரிப்படைவேன். படிப்பிற் குறைந்தவர்களுக்காகப் பரிதாபப்படுவேன். சிலர் துட்டர்கள்; மற்றைய மாணவர்களோடு சண்டை செய்வார்கள். சில சமயம் என்னையும் துன்புறுத்துவார்கள். அவர்கள் மீது சினங் கொள்வேன். பின்னர் அவர்கள் ஆசிரியரிடம் அடி வாங்கி அழுவார்கள். அப்போது நானும் அவர்களுக் காக அழுவேன். நான் ஆசிரியர்கள் பலரைக் கண்டிருக் கிறேன். அவர்களிற் சிலர் அன்போடு, விளக்கமாகப் பாடங் கற்பிப்பர். அவர்கள் வருகைக்காக நான் தவங் கிடப்பேன். சிலர் முன்கோபக்காரர். முன்பின் யோசி யாமல் மாணவர்களைத் தண்டிப்பார்கள். அவர்கள் வந்துவிட்டால் வகுப்பிலே களை இருக்காது. அவர்கள் எப்போது இங்கிருந்து போவார்கள் என எண்ணுவேன். பெரிய கொண்டாட்டங்கள் நடைபெறும்போது சில சமயம் என்னை மேடையில் ஏற்றுவார்கள். ஒருமுறை இந்நாட்டு மந்திரி ஒருவரைத் தாங்கும் பேறு எனக்குக் கிடைத்தது. இவையெல்லாம் பழங்கதை.

இப்பொழுது நான் கிழவனாய் விட்டேன். என் கால்கள் தள்ளாடுகின்றன. காற் பொருத்துக்கள் சோரு கின்றன. கையிரண்டும் முறிந்துவிட்டன. நான் மிகுந்த கிழவனாய் விட்டதாக ஆசிரியர்கள் அதிபரிடம் முறை யிடுகிறார்கள். விரைவில் எனக்கு ஓய்வு கிடைத்துவிடும்.

# 9

## எனது பாடசாலை விளையாட்டுப்போட்டி

குறிப்புக்கள் :

1. விளையாட்டுப்போட்டி நடைபெற்ற நாள்.
2. விளையாட்டிட அலங்காரம்; மக்கள்கூட்டம்.
3. இல்லங்களும் அவற்றின் அலங்காரமும்.
4. பிரதம விருந்தினர்.
5. விளையாட்டுப் போட்டிகள்.
6. வெற்றிபெற்ற இல்லம்; பரிசு வழங்கல்.

எங்கள் கல்லூரியில் ஆண்டுதோறும் பல கொண்டாட்டங்கள் நடைபெறும். அவற்றிலே சிறப்புடையது வருடாந்த விளையாட்டுப் போட்டியாகும். அது பெரிய விழாவாக நடைபெறும். அவ்விழா ஒவ்வோராண்டும் ஆடிமாதம் நாலாந் திகதி கொண்டாடப்படுவது வழக்கம். இந்த ஆண்டும் ஆடிமாதம் நாலாந்திகதியன்று எங்கள் கல்லூரியில் விளையாட்டுப் போட்டி நிகழ்ந்தது. அன்று மாலை இரண்டுமணியளவில் அவ்விழா கால்கோளாயிற்று.

அன்று விளையாட்டு மைதானம் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அதனைச் சூழவரப் பல வண்ணக் கொடிகள் பறந்துகொண்டிருந்தன. அவை பல

நிறப் பறவைகள் பறப்பதுபோலத் தோற்றமளித்தன. பார்வையாளர் இருக்குமிடம் வெண்ணிறக் கொடிகளால் அழகுற அலங்கரிக்கப்பட்டிருந்தது. மைதானத்தின் நடுவே பச்சையும் சிவப்புஞ் சேர்ந்த கல்லூரிக்கொடி வானளாவப் பறந்தது. அதனயலிலே வேறு நான்கு கொடிகள் காணப்பட்டன. அவை ஒவ்வொரு இல்லத்துக்கு முரியவை. பச்சை, சிவப்பு, மஞ்சள், நீலம் என்னும் நிறங்கள் கொண்டவை. அந்தக் கொடிகளெல்லாம் மக்களை ''வாருங்கள், வந்து பாருங்கள்'' எனக் கைகாட்டி அழைப்பனபோலக் காற்றில் அசைந்தன.

மைதானத்தின் தென்திசையிலே இல்லங்களுக்குரிய நான்கு பந்தல்கள் காட்சியளித்தன. அவற்றுள் ஒன்று சுந்தரர் இல்லம்; அதற்குரிய நிறம் பச்சை. அவ்வில்லத்தைப் பச்சைத் தென்னோலை கொண்டு கோபுரம் போலக் கட்டி அலங்கரித்திருந்தார்கள். அடுத்தது சம்பந்தர் இல்லம்; அதற்குரிய நிறம் சிவப்பு. செந்நிறக் காகிதத்தால் அலங்கரிக்கப்பட்டு அது பொலிவுற்றது. அதனை ஒரு மாடிவீடு போல அமைத்திருந்தார்கள். மற்றையது வாகீசர் இல்லம். அதற்குரிய நிறம் மஞ்சள். அதனை வாழைமடல் கொண்டு அழகியதொரு வீடு போல அலங்கரித்திருந்தார்கள். நான்காவது மாணிக்கர் இல்லம். அதற்குரிய நிறம் நீலம். அதனை நீலத்துணிகளால் அழகிய நாடக அரங்குபோல அணிசெய்திருந்தார்கள்.

சரியாக இரண்டரை மணிக்குப் பிரதம விருந்தினரும் அவரது பாரியாரும் வந்து சேர்ந்தனர். கல்வியமைச்சின் நிரந்தரக் காரியதரிசியே பிரதம விருந்தினராவர். அவரை அதிபரும் ஆசிரியர்களும் சாரணர்களும் மரியாதையுடன் வரவேற்று மேடைக்கு அழைத்துச் சென்றனர். அவர் விளையாட்டு வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

முதலில் ஓட்டப் பந்தயங்கள் நிகழ்ந்தன. அதனை யடுத்து, குண்டெறிதல், பரிதிவட்டம் வீசுதல், ஈட்டி எறிதல் என்பன நடைபெற்றன. அப்போது இன்னோ ரிடத்திற் பலவகைப் பாய்தற் போட்டிகள் நிகழ்ந்தன. இறுதியில் இல்லங்களுக்கிடையே நடைபெற்ற அஞ்ச லோட்டப் போட்டியும் விநோத உடைப் போட்டியும் மக்கள் மனத்தைப் பெரிதும் கவர்ந்தன.

மாலை ஐந்தரை மணியளவிற் போட்டிகள் முடி வடைந்தன. அதன்பின் பரிசளிப்பு நடைபெற்றது. வெற்றிவீரர்களுக்குப் பிரதம விருந்தினரின் பாரியார் பரிசில் வழங்கினார். அன்றைய போட்டியிலே சுந்தரர் இல்லமே முதலிடம் பெற்றது. அதனால், அதற்கு மிகப் பெரிய வெற்றிக் கிண்ணம் பரிசிலாக வழங்கப்பட்டது. அப்போது மாணவர்களின் ஆரவாரம் விண்ணை முட்டியது. மாலை ஆறரை மணியளவிலே கல்லூரிக் கீதத்தோடு விளையாட்டுப்போட்டி நிறைவுற்றது.

# 10

## காலைக்காட்சி

குறிப்புக்கள் :

1. அதிகாலை நிகழ்ச்சிகள்.
2. சூரியன் உதிக்கும் அழகு.
3. காலை நிகழ்ச்சி.
4. காலைப் பொழுதும் புலவர்களும்.

அதிகாலையிலே அங்கும் இங்குமாகச் சேவல்கள், ''சூரியபகவானே, வருக; விரைந்து வருக'' என்று சிறகடித்துக் கூவுகின்றன. அப்பொழுது மெல்ல மெல்லக் கிழக்குத்திசை வெளுக்கத் தொடங்குகிறது. அதனைக் கண்ட காகங்கள், சூரியன் வருகைக்குக் கட்டியங் கூறுவது போன்று 'கா, கா' எனக் கத்திக்கொண்டு பறக்கின்றன. உயர் மரக் கொம்பரிலுள்ள பறவையினங்கள் பலவகை ஒலி எழுப்புகின்றன. பூமியெங்கும் ஒளி வெள்ளம் பரக்கிறது. உலகப் பொருள்கள் யாவும் விளக்கமாகத் தோன்றுகின்றன. இருளிலே இரைதேடிய கொடிய விலங்குகள் தத்தம் இருப்பிடத்தை யடைகின்றன. இரவிலே முல்லைமலர்கள்போல விளங்கிய விண்மீன்கள் ஒளிமழுங்கி மறைகின்றன.

கீழ்வானில் மெல்ல மெல்லச் செவ்வொளி படருகிறது. அதனோடு பல நிறங்கள் கலந்து அழகிய சித்திரக்காட்சி அங்கே தோன்றுகிறது. செம்பொன்னாற் செய்யப்பட்ட கோளம்போல ஆதவன் மெல்ல மெல்ல உதயஞ் செய்கின்றான். ஆதவனின் பொற்கதிர்கள் தக தகத்துக் கண்ணை மயக்குகின்றன. அவன் மெல்ல வான முகட்டை நோக்கி உயருகிறான். மரஞ்செடி கொடிகளும் நீர்நிலைகளும் பொன்னொளிபட்டுச் சிரிக்கின்றன. சோலை களிலே பலவகை மலர்கள் மலர்ந்து ஆதவனை வரவேற் கின்றன. குளங்களிலே தாமரை கதிரவனைக் கண்டு களிகொண்டு மலர்கிறது. சுருங்கக் கூறின் உலகெங்கும் உள்ளத்தைக் கவரும் அழகுக் காட்சி விளங்குகிறது.

காலை மலர்ந்ததும் மக்கள் துயிலுணர்ந்து, புதிய ஒருநாளைக் காண்கின்றனர். திருக்கோவில்களில் மணி யொலி கேட்கிறது. சங்கங்கள் முழங்குகின்றன. பத்திப்பாடல்களும் வேதமந்திரங்களும் ஒலிக்கின்றன. உழவர்கள் ஏரும் எருதுங் கொண்டு வயல்களை நோக்கிச் செல்கின்றனர். ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர் வீடு திரும்புகின்றனர். வீடுகளிலே பெண்கள் முற்றம் பெருக்குகின்றனர்; கலங்களை விளக்கு கின்றனர்; நீராடிவிட்டுக் குடங்களிலே தண்ணீர் மொண்டு வருகின்றனர்; மாட்டுத் தொழுவத்திலே, 'அம்மா' என்றழைக்கும் கன்றின் பரிவுக்குரல் கேட்டு, பால் கறக்கச் செல்லுகின்றனர்; பின்னர் காலையுணவு சமைப்பதில் முழுமூச்சாக ஈடுபடுகின்றனர். சிறுவர் பல்துலக்கி, முகம் கழுவி, கடவுளைத் தொழுது, தத்தம் பாடங்களைப் படிப்பதில் ஈடுபடுகின்றனர். பின்னர், காலை உணவருந்தி, புத்தகங்களை எடுத்து, மாதா வழி யனுப்பப் பாடசாலையை நோக்கிச் செல்லுகின்றனர். உத்தியோகத்தர், இயந்திரம் போலத் தத்தம் அலுவ லகங்களை நாடுகின்றனர். தொழிலாளர் தத்தம் வேலைத் தலங்களை நோக்கி விரைகின்றனர். உலகம் சுறு சுறுப்பாக இயங்கத் தொடங்குகின்றது.

பூமியை எம்மை வளர்க்குந் தாயெனவும் சூரியனை உலக வளர்ச்சிக்கு வேண்டியன உதவுந் தந்தை யெனவும் சுப்பிரமணியபாரதியார் வருணிக்கிறார். புகழேந்திப் புலவர் நளவெண்பாவிலே, காலை மலர்ந்தபோது இரண்டு கூம்பின; இரண்டு கண் விழித்தன என அழகாகக் கூறுகிறார். கூம்பியன கடவுளைத் தொழும் அந்தணர் கைகளும் பகலில் கூம்பும் குமுத மலர் களுமாம். கண்விழித்தன உலகமும் தாமரை மலர்க ளுமாம்.

"பூசுரர்தங் கைம்மலரும் பூங்குமுத மும்முகிழ்ப்பக்
காசினியுந் தாமரையுங் கண்விழிப்ப.........."

என்பது அப்பாட்டின் பகுதி. எம்மால் தங்கத்தாத்தா எனச் செல்லமாக அழைக்கப்படும் சோமசுந்தரப் புலவர்,

"கூரிரு ளகன்றது கூவின கோழி
குருவிக ளேழுந்தன மறைந்தன விண்மீன்
ஏரியிற் றமரை இனமலர் மலரும்
இறையவன் கோவிலில் மணியோலி கேட்கும்
ஊரினிற் றேழில்புரி மாந்தர்கள் எழுந்தார்
உயர்மரக் கோம்புவிட் டோடின காக்கை
சேர்கிழக் கேனுந்திசை வேளுத்தது மெல்லச்
செங்கதி ரவனுத யஞ்செய்கி றனே".

என அழகாகக் காலைக் காட்சியைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

காலை இனியது. கதிரவன் இனியன். எனவே, "ஞாயிறு போற்றுதும்; ஞாயிறு போற்றுதும்".

# 11

## உரையாடல்

### (பாடசாலையில் நடைபெற்ற ஒரு கொண்டாட்டம்)

குறிப்புக்கள் :

1. ஆரம்பம்.
2. கொண்டாட்டம் எதுவென்பது.
3. அலங்காரங்கள்.
4. விருந்தினரை வரவேற்றல்; அவர் உரை.
5. பரிசளிப்பு.
6. பரிசளிப்பு விழாவின் முடிபு.

**பாலன் :** சந்திரா, வணக்கம்.

**சந்திரன் :** வணக்கம், பாலா; எப்பொழுது வதுளையில் இருந்து வந்தீர்?

**பாலன் :** நேற்றுக் காலையிலேதான் வந்தேன். இங்கு எனது அக்காவுடன் தங்கியிருக்கிறேன்.

**சந்திரன் :** பாலா, இம்முறை உங்கள் கல்லூரிப் பரிசளிப்பு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றதாம். தினசரிப் பத்திரிகையிற் படித்தேன். உண்மைதானா?

**பாலன் :** ஆம் ; வழக்கத்தை விட இம்முறை பரிசளிப்பு விழா மிகச் சிறப்பாக அமைந்திருந்தது.

**சந்திரன் :** அப்படியா ? அதற்குக் காரணம் என்ன ?

**பாலன் :** ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்ருேர் என்போரின் ஒத்துழைப்புத்தான் காரணம். அவர் களிற் சிலர் தாராளமாக நிதியுதவியளித்தனர். சிலர் பரிசுப் பொருள்கள் தந்தார்கள்.

**சந்திரன் :** கல்லூரி அலங்காரங்கள் எப்படியிருந்தன ?

**பாலன் :** கேட்கவேண்டுமா ! நன்ருகத்தான் அலங்காரம் செய்தோம். வாயிலிலிருந்து மண்டபத்தின் முகப்பு வரை அழகுசெய்தோம். இருபக்கங்களிலும் குலே வாழைகள் நட்டோம். மாவிலேத் தோரணங்களும் மகரதோரணங்களும் கட்டினேம். செவ்விளநீரை நிரை நிரையாகத் தூக்கினேம்.

**சந்திரன் :** நல்லது, உங்கள் பரிசளிப்பு விழாவுக்கு யார் பிரதம விருந்தினராக வந்தார் ?

**பாலன் :** எங்கள் உதவிக் கல்வியதிகாரிதான் பிரதம விருந்தினராக வந்தார். அவர் வருகையும் விழாவின் சிறப்புக்கு ஒரு காரணமாகும்.

**சந்திரன் :** பிரதம விருந்தினர் வந்ததும் என்ன நிகழ்ந்தது?

**பாலன் :** பிரதம விருந்தினரும் அவரது மனேவியும் வாசலில் வந்ததும் மேளவாத்தியம் முழங்கியது. அதிபரும் ஆசிரியர்களும் அவரை வரவேற்றனர். இருபக்கங்களிலும் மாணவர் அணியணியாய் நின்று மரியாதை செலுத்தினர். அவர்களே எல்லோரும் விழா மண்டபத்துக்கு மேளவாத்திய சகிதம் அழைத்துச் சென்றனர்.

**சந்திரன் :** பரிசளிப்பு விழாவில் உங்கள் அதிபர் யாது கூறினுர் ?

**பாலன் :** சந்திரா, அவர் மிக நீண்ட அறிக்கை ஒன்றைப் படித்தார். அவ்வறிக்கையில் ஆசிரியர்களின் ஒத்துழைப்பு, மாணவர்களின் கல்வித்திறமை, விளேயாட்டுவன்மை முதலிய விடயங்கள் இருந்தன.

**சந்திரன் :** அப்படியா ? உங்கள் பிரதம விருந்தினர் என்ன கூறினர் ?

**பாலன் :** அவர் கூறியது முழுவதையுஞ் சொல்லல் இயலுமா சந்திரா. அவர், ''பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்டது. அதனல், அரசாங்கமே எல்லாத் தேவைகளையும் நிறைவேற்றும் என்று எதிர்பார்க்கக்கூடாது. பெற்ருேரும் உதவி செய்தல் வேண்டும்'' என்று கூறினர்.

**சந்திரன் :** அவர் கூறியதை அழகாகச் சொல்லுகிருயே. பாலா, நீ கெட்டிக்காரன். அதன் பின்னர் என்ன நடந்தது ?

**பாலன் :** உதவிக் கல்வியதிகாரியின் மனைவியார் பரிசில்களை வழங்கினர். மாணவர்கள் வரிசையாகச் சென்று பணிவுடன் பரிசில்பெற்று மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

**சந்திரன் :** பாலா, உனக்குப் பரிசில் கிடைக்கவில்லையா ?

**பாலன் :** கிடைத்தது. நான் ஐந்து பரிசில்கள் பெற்றேன். தமிழ், ஆங்கிலம், கணிதம், புவியியற் பாடங்களுக்குரிய பரிசில்கள் பெற்றேன். அவற்றுடன் கீழ்ப் பிரிவுத் தமிழ்ப் பேச்சுப்போட்டிக்குரிய முதற் பரிசிலும் எனக்குக் கிடைத்தது.

**சந்திரன் :** நன்று, நன்று; பாலா, உம்மைப் பாராட்டுகிறேன். பரிசளிப்பு விழாவின் இறுதியிற் கலை நிகழ்ச்சிகள் நடைபெறவில்லையா ?

**பாலன் :** நடைபெருமல் இருக்குமா ? விழா முடிவில் 'இரட்டைப்பரிசு' என்னும் நாடகம் நடைபெற்றது. அந்நாடகம் உழவன் வாழ்க்கையைச் சித்திரிப்பது. அந்நாடகத்தை எல்லோரும் மெச்சிப் புகழ்ந்தனர்.

**சந்திரன் :** நல்லது பாலா, நான் விடைபெறுகிறேன். வணக்கம் பாலா.

**பாலன் :** வணக்கம் சந்திரா.

# 12

## எனது கிராமம்

குறிப்புக்கள் :

1. கிராமத்தின் பெயர் ; எல்லே முதலியன.
2. கிராமத்தின் இயற்கையழகு.
3. மக்கள் வாழ்க்கை முறை.
4. கிராமப் பொது நிலேயங்கள் ; விழாக்கள்.
5. கிராமப் பற்று.

எனது கிராமத்தின் பெயர் நாவலூர். அது யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பல கிராமங்களுள் ஒன்று. அதன் வடக்கு எல்லேயாக யாழ்நகர் செல்லும் பெருந்தெரு அமைந்திருக்கிறது. கீழ்த்திசையிற் கோயிலூர் என்னும் கிராமம் உண்டு. தென்திசையில் உப்பாறு ஒன்று ஓடுகிறது. மேற்றிசையிலே சந்திரபுரம் என்னும் சிறுநகருண்டு.

எனது கிராமத்தின் பெரும்பகுதி வயலும் வயல் சார்ந்த இடமுமாய் இருக்கிறது. அதனுல் அது மருத நிலம் என அழைக்கப்படுகிறது. எனது கிராமத்தின் தென்பகுதியிலே பரந்த வயல்வெளியுண்டு. அங்கே

பசிய செந்நெற்பயிர்கள் செழித்து வளர்ந்திருக்கின் றன. அவை, கதிர் சுமந்து தலைவணங்கி நிற்கின்றன. அவ் வயல்வெளியின் இடையிடையே சிறிய குளங்கள் காணப்படுகின்றன. அவற்றில் நீர் நிறைந்திருக்கிறது. அக்குளங்களிலே செந்தாமரையும் வெண்டாமரையும் அல்லியும் மலர்ந்திருக்கின்றன. அவற்றின் அயலிலே பசிய தென்னஞ் சோலைகளும் மாஞ்சோலைகளுஞ் செழித்துக் காணப்படுகின்றன. இங்கொன்றும் அங்கொன்றுமாய்ப் பனந்தோப்புக்கள் தெரிகின்றன. அவற்றினிடையே சிறியனவும் பெரியனவுமான பல வீடுகள் காணப்படு கின்றன.

எனது கிராம மக்களிற் பெரும்பாலோர் கமக்காரர். மாரிகாலத்தில் வயல்களில் நெல்வேளாண்மை செய்வர். கோடையில் அவ்வயல்களிலே பூசினி, வெங்காயம், பயறு, எள் என்பனவற்றைப் பயிரிடுவர். அங்கே ஆண் களும் பெண்களும் சேர்ந்து உழைக்கிறார்கள். அவர்கள் உணவுப் பஞ்சத்தை அறியார். அதனால், அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்கிறார்கள். சிலர் சுருட்டுத் தொழில் செய்கின்றனர். சிலர் நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். சிலர் தச்சுவேலையும் கொல்வேலை யுஞ் செய்கின்றனர். அங்கு எல்லாத் தொழிலாளரும் ஒற்றுமையுடன் வாழ்கின்றனர்.

எங்கள் கிராமத்தின் மத்தியிலே முருகன் ஆலயம் அமைந்திருக்கிறது. அதனயலிலே ஓர் உயர்தர பாட சாலை உண்டு. அஃது எங்கள் கிராமச் சிறுவரின் கல்வியை வளர்க்கிறது. கோவில் வீதியில் ஒரு நெசவுநிலையம் உண்டு. எங்கள் கிராமத்து இளம் பெண்கள் அங்கே நெசவுத்தொழில் செய்கின்றனர். எங்கள் கிராமத்தில் இளைஞர்கள் ஒன்றுகூடி 'நன்னெறிக் கழகம்' அமைத் துள்ளனர். அது கிராமத்துக்குப் பெருந்தொண்டு புரி கிறது. அவர்களது தொண்டின் பயனாய் அரசினர் மருந்துச்சாலையும் பிரசவ விடுதியும் அமைக்கப்பட் டுள்ளன. இந் நிலையங்கள் யாவும் கிராமமக்களின் ஒத்துழைப்பாலே திறம்பட இயங்குகின்றன.

எங்கள் கிராமத்திலே பல விழாக்கள் கொண்டாடப் படுகின்றன. அவற்றுட் சிறப்புடையன முருகன் ஆலயத்தில் நிகழும் திருவிழாக்கள். அவை பத்து நாட்கள் நடைபெறும். அந்நாட்களிலே கிராமத்து ஆண்களும் பெண்களும் சிறுவரும் சிறுமியரும் உற்சாகத்தோடு காணப்படுவர். நன்னெறிக் கழகத்தினர் கொண்டாடும் புதுவருடப்பிறப்பு விழாவும் சிறப்புடையது. வருடப் பிறப்பன்று காலைதொடக்கம் மாலைவரை பல நிகழ்ச்சிகள் நடைபெறும். காலையிலே போர்த்தேங்காய் அடித்தல், 'சைக்கிள்' ஓட்டம், பேச்சுப்போட்டி என்பன நிகழும். மாலையில் விளையாட்டுப்போட்டி நடைபெறும். கிராமத்து மக்கள் முன்னிலையில் இளைஞர்கள் தங்கள் திறமைகளைக் காட்டுவர். அன்று இரவு பல கலைநிகழ்ச்சிகள் நடைபெறும். அவற்றில் நாட்டுக்கூத்து, கோலாட்டம், காவடியாட்டம் என்பன மக்கள் மனத்தைப் பெரிதும் கவரும். அவை முடிவுபெற, நடுச்சாமம் ஆகும். அதுவரையும் மக்கள் பொறுமையுடன் இருந்து கண்டு களிப்பர்.

"பெற்ற தாயும் பிறந்தபொன் னாடும்
நற்றவ வானினும் நனிசிறந் தனவே"

எனப் பாரதியார் பாடியுள்ளார். எனக்கும் நான் பிறந்த கிராமமே எல்லாவற்றினுஞ் சிறந்தது.

# 13

## ஆசிரியருக்குக் கடிதம்

குறிப்புக்கள் :

1. கடித ஆரம்பம்.
2. எழுதும்பொருள் :
   பீடித்த நோய்.
   வைத்திய சிகிச்சை.
3. முடிபு.

அம்மன் கோவிலடி,
சுதுமலை,
20-11-67.

கனந்தங்கிய ஆசிரியர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கம்.

நான் சென்ற இருவாரங்களும் உடனலக்குறைவு காரணமாகப் பாடசாலைக்கு வரவில்லை. அன்றியும் எதிர் வரும் திங்கட்கிழமை வரையும் பாடசாலைக்கு வரமுடியா தென்றே நினைக்கிறேன். அதற்குரிய காரணத்தைப் பின்னால் எழுதியிருக்கிறேன். தயவுசெய்து மன்னிக்க.

ஒருநாள் மாலையில் என் அடிவயிற்றின் வலதுபக் கத்தில் மெல்லிய வலி உண்டாயிற்று. அதை நான்

அலட்சியப்படுத்திவிட்டு விளையாடச் சென்றேன். வீடு திரும்பியதும் அந்த வலி அதிகரித்தது. உடனே அம்மா விடம் கூறினேன். அவர் அது சாதாரண வயிற்றுவலி என்று கூறி, மிளகுரசம் வைத்துக் குடிக்கத் தந்தார். அதனுலும் வலி குறையவில்லை. சிறிதுநேரம் பல்லைக் கடித்துக்கொண்டு பொறுத்துப் பார்த்தேன்; முடிய வில்லை. ''ஐயோ அம்மா, ஐயோ அம்மா'' என்று துடி துடித்துக் கத்தினேன். நிலத்தில் உருண்டு புரண்டேன். அம்மா என்னைப் பார்த்துப் பயந்து போனர். அவருக்கு என்ன செய்வதென்பது தெரியவில்லை. அவர் அப்பாவை எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

அந்தச் சமயத்தில் அப்பா வந்துசேர்ந்தார். அம்மா, அப்பாவுக்கு விடயத்தை விரிவாகக் கூறினுர். உடனே அப்பா வெளியே சென்று மோட்டார்வண்டி கொண்டு வந்தார். சிறிதும் தாமதியாமல் என்னை வண்டியில் ஏற்றினுர். வண்டி வைத்திய நிலையத்தை நோக்கிப் பறந்தது. அங்கேயிருந்த மருத்துவர் என்னைப் பரி சோதித்தார். அவர் எனக்குக் குடல்வால் அழற்சி உண்டாயிருப்பதாகக் கூறினுர்.

என்னைப் பரிசோதித்த மருத்துவர் உடனே அறுவைச் சிகிச்சை செய்தல்வேண்டும் என்றுர். நான் பயத்தால் அழத் தொடங்கினேன். அப்பாவும் மருத்துவர்களும் ஆறுதல் கூறினர். தாமதமின்றி என்னை அறுவைச் சிகிச்சைநிலையத்துக்கு அனுப்பினர். அங்கே மருத்துவர் ஒருவரும் தாதியர் மூவரும் நின்றனர். அவர்கள் வாயை யும் காதையும் மூடிக் கட்டியிருந்தனர். எனக்கு ஏதோ ஒன்றை மணக்கும்படி தந்தனர். அதன்பின் நடந்தன வற்றை நான் அறியேன்.

மற்றைநாள் மாலையிலே நான் கண்விழித்தேன். என் பக்கத்தில் அம்மாவும் அப்பாவும் நின்றனர். அம்மா அழுதார்; அப்பா கண்கலங்கினுர். ஐந்து நாட்கள் அங்கேயே படுத்திருந்தேன். நான் கிடந்த சிகிச்சைச்

சாலையில் நோயாளர் பலர் படுத்திருந்தனர். அவர்களிற் சிலர் முனகினர்; சிலர் வலிதாங்கமுடியாமற் கதறினர். குறித்த குறித்த நேரத்தில் மருத்துவர் வந்து பரிசோதிப் பார். வெள்ளை உடுப்பணிந்த தாதியர் குறித்த நேரத்தில் மருந்து தருவர். அவர்கள் சிரித்த முகத்துடன் பேசிப் பழகுவர். அவர்களைக் கண்டவுடன் நான் மகிழுவேன். இவ்வாறு ஐந்து நாட்கள் கழிந்தன. கடைசி நாளன்று மருத்துவர் வந்தார். அவர் என்னிடம், ''நீர் இரண்டு வருடங்களுக்கு ஓடிவிளையாடல் கூடாது'' என்றார். அதைக் கேட்டபோது நான் மிக்க துயரங்கொண்டேன்.

வீட்டுக்கு வந்தபின்னர்தான் அப்பா எனதுநோயின் தன்மையைப் பற்றிக் கூறினார். பெருங்குடலின் முடிவிலே ஒரு வால் இருக்கிறது. அதற்குக் குடல்வால் என்று பெயர். அது தேவையற்ற ஓர் உறுப்பு. அதனுள்ளே உணவுடன் சென்ற சிறுகற்கள், உமி முதலியன சேர்ந்து விடுவதுண்டு. அதனால், அவ்வுறுப்பு வீங்கி வலியுண் டாக்கும். இவ்வாறு அப்பா விளக்கமாய்க் கூறியதைக் கேட்டு நான் வியப்படைந்தேன்.

இப்பொழுது நான் வீட்டில் இருக்கிறேன். புண் ஆறி விட்டது. எழுந்து நடமாடுகிறேன். இன்னும் நாலைந்து நாட்களிலே பாடசாலைக்கு வருவேன். தயவுசெய்து மன் னிக்கும்படி மீண்டும் வேண்டுகிறேன்.

வணக்கம்

இங்ஙனம்
தங்கள் பணிவுள்ள மாணவன்
**தேவேந்திரன்**

# 14

## எனது பேனா

குறிப்புக்கள் :

1. பேனா கிடைத்த வகை; அதன் தோற்றம் முதலியன.
2. பேனாயோடு எனக்கிருந்த தொடர்பு.
3. தேர்வுகளிலே கூடிய புள்ளிபெறக் காரணமாதல்; ஆசிரியர்கள் இரவல்வாங்குதல் ; மூடி உடைதல்; களவுபோய் மீளல்.
4. அதன்மீது கொண்ட அன்பு.

அப்பா எனக்கு ஒருபேனா தந்தார். அது 'பைலட்' சாதியைச் சேர்ந்தது. பேனா எனக்குக் கிடைத்த அன்று நான் பெருமகிழ்ச்சி யடைந்தேன். அப் பேனாயினுல் எழுதிப்பார்த்தேன். அது மிக நன்ருய் எழுதியது. அதன் தோற்றத்தை உற்று நோக்கினேன். அது என் மனத்தைக் கவர்ந்தது. அஃது என் கைக்கு அடக்கமானது; நான் விரும்பும் நீல நிறத்தையுடையது. அதன் முனை பொன்னைப்போன்று பிரகாசித்தது. அந்த நீலநிற மூடியின் ஒரு பக்கத்திலே பொற்காப்பிருந்தது. அந்த மூடியிலே பளபளப்பான கொளுவி காணப்பட்டது. அது யானையின் தும்பிக்கைபோன்று விளங்கியது.

தந்தையொருவர் தன்மகனை நேசிப்பது போன்று நான் அதனிடம் பாசங்கொண்டேன். அதனைப் பிரிந்திருக்க என் மனம் விரும்புவதில்லை. எப்பொழுதும் எனது சட்டைப் பையில் அது பாதுகாப்போடு இருக்கும். வீட்டிலே தனிமையிலே அதன் அழகைப் பார்த்துச் சுவைப்பேன். சில பொருள்களைப் பிறருக்கு இரவல் கொடுக்கக் கூடாது என்று கூறுவார்கள். அப்பொருள்களில் ஒன்று பேனை. நான் எனது பேனையை எவருக்கும் இரவல் கொடுப்பதில்லை. எனது ஆருயிர் நண்பன் கேட்டாலுங் கொடுக்கமாட்டேன்.

அந்தப் பேனை கிடைத்ததும் எனக்கு நற்காலம் பிறந்தது. பருவத் தேர்வுகளுக்கு அந்தப் பேனையினால் விடை எழுதுவேன். அதனால், எல்லாப் பாடங்களிலும் எனக்குக் கூடியபுள்ளி கிடைத்ததாக எண்ணினேன். சில சமயம் விடை எழுதும்போது மை முடிந்துவிடும். வேறொரு பேனையை உபயோகிப்பேன். அப்படி விடை எழுதிய பாடத்திற் குறைந்த புள்ளியே கிடைக்கும். அதனால், பேனையின்மீது எனக்குப் பேரன்பு பிறந்தது. பேனையை இரவல் கொடுப்பதில்லை என்ற விரதம் சில சமயம் பங்கப்படும். எனது வகுப்பாசிரியர் அடிக்கடி இரவல் கேட்பார். அவர் வேறெவரது பேனையையும் தரும்படி கேட்கமாட்டார். அதனால் அவருக்கு மாத்திரம் இரவல் கொடுப்பேன். அவர் எழுதும்போது அதனைப் புகழ்வார் ; நான் பெருமையடைந்து பூரிப்பேன். ஒருநாள் எனது பக்கத்தில் இருந்த மாணவன் அதனைத் தட்டிவிட்டான். அது கீழே விழுந்தது. பதைபதைப்போடு நான் அதனை எடுத்தேன். அதன் மூடியிலே சிறிய வெடிப்பு ஏற்பட்டுவிட்டது. அன்று முழுவதும் நான் பட்ட வேதனைக்கு அளவேயில்லை. ஒருநாள் எனது பேனை காணுமற் போய்விட்டது. எனது உயிரே போய்விட்டது போன்று துடித்தேன். எல்லா இடங்களிலுந் தேடிப் பார்த்தும் அதனைக் காணவில்லை. நான் கண்ணீர்விட்டு அழுதேன். என் அழுகையைக் கண்டும் எடுத்தவர்கள் மனம் இரங்கவில்லை. கடைசியில் வகுப்பாசிரியரிடம்

கூறினேன். அவர் எனது வகுப்பு மாணவர்கள் எல்லோரையும் விசாரித்தார். ஈற்றில் மாணவன் ஒருவன் மீது சந்தேகங் கொண்டார். அதட்டியும் வெருட்டியும் வினவினர். உண்மை வெளியாயிற்று. அவன் பேனையை எடுத்து வேறொரு வகுப்பு மாணவனிடங் கொடுத்திருந்தான். கடவுள் செயலாலே பேனை மீண்டும் கிடைத்தது. நான் ஆனந்தத்தாலே துள்ளிக் குதித்தேன். மெல்ல மெல்ல என் பேனைக்கு நோய் உண்டாயிற்று. கழுத்திலிருந்து மை கசியத் தொடங்கியது. அதற்காக என் பேனையை வெறுத்துவிட முடியுமா? பல வைத்தியமுறைகளைக் கையாண்டு பார்த்தேன். கழுத்துக்கு நூல் சுற்றி இறுக்கினேன்; வெண்கட்டி மாவைப் பூசினேன். எந்த மருந்துக்கும் அந்நோய் மாறவில்லை. என்றாலும் அதனை இன்றும் போற்றிப் பாதுகாக்கிறேன்.

சின்னஞ்சிறிய பேனையாஞலும் அதன்மீது நான் கொண்ட அன்பு பெரிது. புதிய புதிய பல பேனைகள் கிடைத்தாலும் அதனை நான் கைவிடேன். மூடி உடைதலும் மை கசிதலும் எனக்குக் குறைகளாகத் தெரியவில்லை. அந்தப் பேனையை நான் எனது உயிர் போல நேசிக்கிறேன்.

# 15

## மழைநாள்

குறிப்புக்கள் :

1. மழை அறிகுறிகள்.
2. மழை பெய்யுங் காட்சி.
3. மழைவிட்ட பின்னர் நிகழும் நிகழ்ச்சிகள்.
4. மழைநாளிற் சிறுவருக்கு ஏற்படும் அனுபவங்கள்.

வடகீழ் வானிலே கார்முகிற் கூட்டம் தோன்றுகிறது. அது மெல்ல மெல்ல மேலெழுகிறது ; வானம் முழுதும் பரவுகிறது ; சூரியனை மறைக்கிறது. திசைகளனைத்தும் இருளுகின்றன. விண்ணில் அங்கொன்றும் இங்கொன்றுமாக மின்னல் வெட்டுகிறது. அது கண்ணைக் கூசச் செய்கிறது. மின்னலைத் தொடர்ந்து இடிமுழக்கம் காதைச் செவிடுபடுத்துகிறது. மெல்லிய குளிர்காற்று வீசுகிறது. மழை தூறத் தொடங்குகிறது. அது பூமியின் மீது பன்னீர் தெளிப்பதுபோலத் தோன்றுகிறது.

சிறிது நேரத்திலே சிறு தூறல் பெருமழையாக மாறுகிறது. 'சோ' என்ற இரைச்சலுடன் மழை பொழிகிறது. வானத்திலிருந்து தாரை தாரையாக மழை

கொட்டுகிறது. சிறுவர்கள் ''மழையே, மழையே, மெத்தப் பெய்'' என்று பாடுகிறார்கள். மரஞ் செடி கொடிகள் மழையிலே குளிக்கின்றன. அவை இலைக் கரங்களால் நீரை ஏந்தி மகிழ்வுடன் விளையாடுகின்றன. மேயச்சென்ற மந்தைகள் மழையிலே நனைந்துகொண்டு வீட்டை நோக்கி விரைகின்றன. பறவையினங்கள் ஒதுக்கிடந் தேடுகின்றன. மக்கள் வீடுகளில் அடங்கிக் கிடக்கிறார்கள். மழையின் வேகம் கூடிக்கொண்டே செல்கிறது. பூமி ஆசைதீர மழைநீரைக் குடிக்கிறது. அது குடித்து எஞ்சிய நீர் வெள்ளமாய் ஓடுகிறது. அந்த வெள்ளம் மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கி ஓடுகிறது. பள்ளங்களெல்லாம் நீர் நிறைந்து சிறுச் சிறு குளங்களாகின்றன. வயல்வரம்புகளை மேவி வெள்ளம் பாய்கிறது. அங்குமிங்கும் தவளைகள் சத்தம் இடுகின்றன.

மூன்று மணித்தியாலமாய் மழைவிடாமற் பெய்தது. பின்னர் சிறிது சிறிதாய் மழை குறைந்தது. இப்பொழுது வானம் நிர்மலமாய் விளங்குகிறது. சூரிய ஒளி பூமி எங்கும் பரவுகிறது. மழையில் நனைந்து விறைத்த பூமிக்குச் சூரியன் வெம்மையளிக்கிறான். பறவைகள் இறக்கையடித்து ஈரம் போக்கிவிட்டுப் பறக்கின்றன. மரங்களெல்லாம் புதுமைப் பொலிவுடன் விளங்குகின்றன. உழவர் மண்வெட்டியைத் தோளிலே தாங்கிக் கொண்டு வயலை நோக்கி விரைகின்றனர்; வரம்புகளைச் செப்பனிட்டு வயல்நீரைத் தடுக்கின்றனர்; மழையை வாழ்த்துகின்றனர். ஒழுக்குவீட்டிலே குடியிருந்தவர்கள் மழையைத் திட்டுகின்றனர். பாவம்! யாருக்கென்று தான் மழை பெய்யும்! சில இடங்களில் வெள்ளம் தேங்கி நிற்கிறது. அங்குள்ள வீடுகள் சிறுச்சிறு தீவுகள்போலத் தோன்றுகின்றன. அங்குள்ள மரஞ் செடிகள் நீரில் முளைத்தன போன்று காணப்படுகின்றன.

வீட்டிலே அடைபட்டுக்கிடந்த சிறுவர் ஆரவாரத்துடன் வெளிப்படுகின்றனர். விடுதலை பெற்ற கூண்டுக் கிளிபோல, ஓடியாடித் துள்ளிக் களிக்கின்றனர். சிலர்

கூட்டங்கூட்டமாக வெள்ளம் அலசி விளையாடுகின்றனர். ஒருவர்மேல் ஒருவர் வெள்ளத்தை எற்றிச் சிரிக்கின்றனர். அவர்களின் உடை முற்றுக நனைந்துவிடுகிறது. அவர்களுக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. சிலர் கூடிநின்று கடதாசிக் கப்பல்கள் விடுகின்றனர்; வெள்ளத்தோடு அவை செல்லும்போது கைகொட்டி ஆரவாரிக்கின்றனர். சிறுவன் ஒருவனின் கடதாசிக் கப்பல் மூழ்கி விடுகிறது ; அவன் தலையிலே கைவைத்துக்கொண்டு அழுகிருன். இன்னொருவனின் கப்பல் ஓடிச்சென்று தூரத்திலே மறைந்துவிடுகிறது ; அவன் அதைத் தேட முயலுகிருன். சிலர் மரக்கிளைகளை ஆட்டுகின்றனர். நீர்த்துளி தெறிப்பதைக் கண்டு சிரிக்கின்றனர். தாய்மாரிற் சிலர் தடியுடன் அங்கே வருகின்றனர். உடனே, சிறுவர்கள் அங்குமிங்குமாக ஓடுகின்றனர். மழை வந்துவிட்டால் சிறுவர்களுக்குக் கரை காணுக் களிப்புண்டாகும். ஆனுல், தாய்மாருக்கோ தலைவேதனை பிறக்கும்.

# 16

## திருமண நிகழ்ச்சி

குறிப்புக்கள் :

1. திருமண நாள் இன்னதென்பது.
2. திருமண வீட்டு அலங்காரம்.
3. உறவினர், நண்பர் வருகை.
4. மணமகன் அழைப்பு.
5. சமயச் சடங்குகள்.
6. விருந்துபசாரம்.

என் பெற்றோர் அக்காவுக்குத் திருமணஞ் செய்து வைக்கத் தீர்மானித்தார்கள். மணமகன் எங்கள் உறவினர்; அயலூரில் வசிப்பவர். அந்தத் திருமணத்துக்கான நாள் குறிக்கப்பட்டது. திருமணத்துக்கான ஆயத்தங்களில் எல்லோரும் மும்முரமாக ஈடுபட்டார்கள்.

குறிப்பிட்ட நாளும் வந்துவிடுகிறது. எங்கள் வீடு வெள்ளையடிக்கப்பட்டுப் புதுமையடைகிறது. முற்றத்தை மூடிய கொட்டகைப் பந்தர் நிமிர்ந்து நிற்கிறது. வீடும் பந்தரும் வெள்ளைகட்டப்பட்டு விளங்குகின்றன. மலர் மாலைகளும் மணி மாலைகளும் அவற்றை அலங்கரிக்

கின்றன. பந்தரின் மேற்குப் புறத்தில் மணவறை அமைக்கப்பட்டிருக்கிறது. அது கோபுரவடிவு கொண்டு நிற்கிறது. சித்திர சிற்ப வேலைப்பாட்டோடு கூடிய அது, கண்ணைக் கவருகிறது. வெளிவாயிலிலே பெரிய மாளிகை போன்ற சிகரம் கட்டப்பட்டிருக்கிறது. சிகரம், பந்தர், வீடு என்பன மின்விளக்கொளியிற் பிரகாசிக்கின்றன. சிகரவாயிலில் இரு பெரிய குலைவாழைகள் கட்டப்பட்டிருக்கின்றன. அவை தலை வணங்கி அனைவரையும் வரவேற்கின்றன. எங்கெங்கும் மகரதோரணங்களும் மாவிலைத் தோரணங்களும் மலர்மாலைகளுந் தொங்க விடப்பட்டிருக்கின்றன. சுருங்கச் சொன்னால் எங்கள் வீடு அரசமாளிகைபோலப் பொலிவுறுகிறது.

இப்பொழுது மங்கள இசை ஒலிக்கத் தொடங்குகிறது. இரட்டை நாதஸ்வரம் இன்னிசை பொழிகிறது; மேளம் முழங்குகிறது. உறவினரும் நண்பர்களும் வரத் தொடங்குகிறார்கள். பெண்கள் வண்ணவண்ணப் பட்டுடுத்தி, மலர்சூடி வருகிறார்கள். ஆண்க்ள் தூய வெண்ணிற உடையோடு கம்பீரமாக வருகிறார்கள். சிறுவர், சிறுமியர் விதம் விதமான உடையணிந்து வண்ணத்துப் பூச்சிகள் போன்று ஓடித்திரிகிறார்கள். அங்குள்ளோர் எல்லோரும் பெருங் களிப்புடன் காணப்படுகிறார்கள்.

இப்பொழுது மணமகனை அழைத்துவருகிறார்கள். மயில்போன்று அலங்கரிக்கப்பட்ட மோட்டாரில் மணமகன் அமர்ந்திருக்கிறார். அவரின் பக்கலில் என் அண்ணா மணமகனுக்குத் தோழனாய் இருக்கிறார். வண்டி மெல்ல மெல்ல ஊர்கிறது. முன்னே ஆண்களும் சிறுவருஞ் செல்கின்றனர். பின்னாற் பெண்களின் கூட்டம் தொடர்கிறது. மேளவாத்தியகாரர் தத்தம் திறமையைக் காட்டி வாசிக்கின்றனர். வழியிலுள்ள வீட்டு வாயில்களிலே பூரண கும்பங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அங்கே மணமகனுக்கு ஆரத்தி எடுக்கிறார்கள். ஈற்றில் மணமகன் எங்கள் வீட்டு வாயிலில் இறங்குகிறார். எங்கள் வீட்டார் மணமகனை எதிர்கொள்ள வருகின்றனர். அண்ணா மணமகனின் பாதங்களைக் கழுவுகிறார். பெண்கள் ஆரத்தி

எடுக்கின்றனர். பின்னர் மணமகன் பந்தரினுள்ளே சென்று மணவறையில் அமருகிருர்.

உடனே திருமணச் சடங்குகள் ஆரம்பமாகின்றன. அந்தணர் வேதமந்திரங்களை ஓதுகிருர்; ஓமகுண்டத்தில் அக்கினி வளர்க்கிருர். சிறிது நேரத்தின்பின் மணப்பெண் தோழியர் புடைசூழ வருகிருள்; குனிந்த தலையுடன் மெல்ல மெல்ல வருகிருள். மணப்பெண் மணமகனின் பக்கத்தில் அமருகிருள். மேலும் பலபல சடங்குகள் நிகழுகின்றன. அந்தணர் தாலியை எடுத்து மணமகன் கையிற் கொடுக்கிருர். மேளவாத்தியங்கள் பேரொலி யுடன் முழங்குகின்றன. அந்தணர்கள் மந்திரங்களைக் கோஷிக்கிருர்கள். மணமகன் மணமகளின் கழுத்திலே தாலியைக் கட்டுகிருர். ஈற்றில் பெரியோர்கள் அறுகரிசி யிட்டு மணமக்களை வாழ்த்துகின்றனர். வாழ்த்துக்கள் முடிந்ததும் மணமக்கள் வீட்டினுள்ளே செல்கின்றனர். ஆரவாரங்கள் ஓய்கின்றன.

அதன்பின்னர் விருந்து நடைபெறுகிறது. மணமகன் வீட்டாரும் மணமகள் வீட்டாரும் அருகருகே அமரு கின்றனர். அறுசுவை யுணவுண்டு மகிழ்கின்றனர். பின்னர் ஒவ்வொருவராகத் தாம்பூலம்பெற்றுக்கொண்டு விடைபெறுகின்றனர். திருமண நிகழ்ச்சி நிறைவெய்து கிறது.

# 17

## ஒரு திருநாள்

குறிப்புக்கள் :

1. ஆரம்பம்.
2. திருநாளின் பெருமை.
3. திருநாட் கொண்டாட்டம்.
4. சிறுவர் களிப்பு.
5. முடிவு.

தமிழர் ஆண்டுதோறும் பல திருநாள்களைக் கொண்டாடுவர். அவை மக்களுக்குப் புத்துணர்வு ஊட்டுகின்றன ; மக்களிடையே ஒற்றுமையை வளர்க்கின்றன; தெய்வபத்திக்குக் காரணமாய் அமைகின்றன. அத்தகைய திருநாள்களிற் சிறப்புடையன புதுவருடப் பிறப்பு, தீபாவலி, தைப்பொங்கல் என்பன. அவற்றுள் நான் விரும்புந் திருநாள் தைப்பொங்கல் ஆகும்.

தைமாதம் முதல் நாளிலே தைப்பொங்கல் கொண்டாடப்படுகிறது. அதனை உழவர்திருநாள் எனச் சிறப்பித்துக் கூறுவர். உழவன் உணவுப் பொருள்களை உண்டாக்கி, உயிர்களைக் காப்பாற்றுகிறான். அவனது தொழிலுக்கு மழையும் வெயிலும் மிக இன்றியமையா

தன. மழையையும் வெயிலையுந் தருபவன் சூரியன். சூரியன் வேண்டிய காலத்தில் மழையைப் பெய்வித்துப் பயிர்களை வளரச் செய்கிறான். வெயிலைத்தந்து பயிர்களை விளையச் செய்கிறான். உழவனுக்குச் சூரியன் செய்யும் நன்மை அளவிடற்கரியது. அந்த நன்மையை உழவன் மறப்பதில்லை. அதனால், அவன் சூரியனைத் தெய்வமாகப் போற்றுகிறான்; பொங்கலிட்டுத் தன் நன்றியறிதலைக் காட்டுகிறான்; அதற்குரிய நாளாகத் தைத்திங்கள் முதனாளைத் தெரிந்தெடுத்திருக்கிறான். உழவுத்தொழிலுக்கு மாடுகளும் பேருதவி புரிகின்றன. அவை வயலை உழுது வளமாக்குகின்றன; பாலைத் தந்து மக்களைக் காக்கின்றன. அதனால், அவைகள் செய்த உதவியையும் உழவன் மறப்பதில்லை. தைப்பொங்கலுக்கு அடுத்த நாள் அவைகளுக்காக அவன் பொங்கலிடுகிறான்.

பொங்கலுக்கு முன்னர் வீடுகளை வெள்ளையடித்தும் கழுவியும் மெழுகியுஞ் சுத்தஞ் செய்வர். பொங்கலன்று அதிகாலையில் எல்லோருந் துயிலெழுந்து நீராடி, புத்தாடை யணிவர். தோத்திரம் பாடி இறைவனை வழிபடுவர். பின்னர், முற்றத்தை மெழுகிக் கோலம் போடுவர். அதனைச் சூழ மாவிலையாலும் தென்னங்குருத்தாலும் தோரணங் கட்டுவர். நாலு மூலைகளிலும் வாழை நாட்டுவர். நிறைகுடம் வைத்து, குத்துவிளக்கேற்றுவர். கோலத்தின் நடுவே அடுப்பு அமைத்து நெருப்பு மூட்டுவர். புதுப்பானையின் கழுத்திலே மாவிலை, இஞ்சியிலை, மஞ்சள் இலை என்பவற்றைக் கட்டுவர். பானையிற் பசும்பாலை நிறைப்பர். பின்னர் அதனை அடுப்பிலேற்றிப் பொங்குவர். பால் பொங்கிவரும்போது சூரியனை வணங்குவர். எல்லாச் செல்வங்களும் பொங்கவேண்டுமென்று வேண்டுவர். பச்சையரிசி, பயறு, சருக்கரை என்பவற்றை அந்த உலையிலிடுவர். பொங்கல் ஆனதும் தலைவாழையிலையிற் படைத்து, தோத்திரம் பாடி வணங்குவர். பின்னர் எல்லோரும் ஒன்றுகூடி, உண்டு மகிழ்வர்.

அதற்கு அடுத்தநாள் மாட்டுப் பொங்கல் நிகழும். அதனைப் பட்டிப் பொங்கல் என்றும் அழைப்பர். பட்டியிலுள்ள மாடுகளைக் குளிப்பாட்டி அவற்றுக்குச் சந்தனம், குங்குமம் என்பவற்றைப் பூசுவர். மலர் மாலை சூட்டுவர். அவைகளின் நன்றியை எண்ணிப் பொங்கலிடுவர். மாடுகளுக்குப் பொங்கலை ஊட்டி மகிழ்வர்.

அந்த இருநாள்களிலும் சிறுவர் கரைகாணுக் களிப் படைவர். நாள் முழுதும் வெடி சுட்டும் வாணம் விட்டும் மகிழ்வர். வாணங்கள் பொன்னிறப் பொறி சிதறி விண்ணில் ஏறும். அவற்றினை அவர்கள் வைத்த கண் வாங்காது கண்டு களிப்பர். மத்தாப்பின் பூக்கள் சிதறும்போது கைகொட்டிச் சிரிப்பர். இனிய சருக்கரைப் பொங்கலைத் தெவிட்டத் தெவிட்ட உண்டு மகிழ்வர்.

தைப்பொங்கலைப் பற்றிப் புலவர்கள் பலர் இனிய பாடல்கள் பாடியுள்ளனர்.

“ பொங்கலின்று பொங்கல் — நல்ல
புத்தமிழ்தப் பொங்கல்
மக்கலங்கள் பொங்க — எங்கள்
மனையிலிடும் பொங்கல் ”

என்பது அவற்றுள் ஒன்றாகும்.

# 18

## கதையாக்கம்

குறிப்புக்கள் :

1. நற்குணமுள்ள அநாதைச் சிறுவன்.
2. ஒரு பெரியார் அவனை வளர்த்தல்.
3. பெரியாரின் கெட்ட மகன்.
4. அநாதைச் சிறுவன் படித்து உத்தியோகமாதல்.
5. பெரியவர் இறக்க அவர் மகன் சொத்தை அழித்தல்.
6. அபாயத்திலகப்படல்.
7. அநாதை அவனைக் காப்பாற்றல்.

மட்டுநகரிலே பெரியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் பெயர் சிவராமன். அவர் பணம் படைத்த பிரபு; கருணையுள்ளங் கொண்டவர்; தான தருமங்கள் செய்பவர். அந்நகரிலுள்ளவர்கள் அவரைத் தருமசீலர் என்றே அழைப்பர்.

ஒருநாள் அவர் கற்குடா என்னும் இடத்திலுள்ள கடலுக்கு நீராடச் சென்றார். நீராடிய பின்னர் அயலிலுள்ள தென்னஞ் சோலையிலிருந்து உணவருந்தத் தொடங்கினர். அப்போது அங்கே சிறுவன் ஒருவன்

வந்தான். அவனுக்குப் பத்து வயது இருக்கும். அவனுடல் வறுமையால் வாடியிருந்தது. அவன் கந்தையாடை அணிந்திருந்தான். எனினும் அவன் முகம் வசீகரம் உடையதாய் இருந்தது. அவன் சிவராமனை நோக்கி, ''ஐயா, பசிக்கிறது'' என்று கேட்டான். சிவராமன் புன்முறுவலுடன் அவனுக்கு உணவு அளித்தார். அவன் உணவுண்டபின்னர் அவனைப்பற்றி அவர் விசாரித்தார். அவன் தனக்குத் தாய்தந்தையர் இல்லை என்றும் தன் பெயர் சுகுணன் என்றும் கூறினன். சிவராமன் அநாதையான சுகுணனைத் தன்னுடன் வசிக்கும்படி அழைத்தார். அவன் மகிழ்ச்சியோடு சம்மதித்தான்.

சிவராமனுக்குத் துருபதன் என்னும் மகன் ஒருவன் இருந்தான். அவன் பணத்திமிர் கொண்டவன். அவன் ஆசிரியர்களையோ பெரியவர்களையோ சிறிதும் மதிப்பதில்லை. சுகுணனைத் தன் வீட்டு வேலைக்காரனைப் போலவே நடத்தினன். துருபதனுக்குக் கல்வி வேப்பங்காய் போற் கசந்தது. பாடசாலைக்குச் செல்லாது தீய நண்பர்களுடன் ஊர்சுற்றித் திரிந்தான். தந்தை சொல்லை அவன் மந்திரமாகப் போற்றவில்லை. ஆயின், சுகுணன் நற்குணன். சிவராமன் ஏவிய பணிகளைச் செய்தான். எல்லோருடனும் பணிவுடன் பழகினன். கல்வி அவனுக்குக் கற்கண்டைப் போன்று இனித்தது. மிகுந்த திறமையோடு படித்துப் பல பரிசுகள் பெற்றான். அவனது பண்பையும் படிப்பின் மீது கொண்ட ஆர்வத்தையுங் கண்டு சிவராமன் மகிழ்ச்சியடைந்தார். தமது மகனின் நிலையை எண்ணி மனம்மிக வருந்தினர். சுகுணனை அவர் தம் மகனுகவே கருதி மேற்படிப்புக்கு அனுப்பினர். அவன் எல்லாத் தேர்வுகளிலுஞ் சிறப்பாகத் தேறினன். மிகவிரைவில் அரசினர் அவனை உயர்தர பதவி யொன்றில் நியமித்தனர்.

தாம் பெற்ற மகன் தீயவனுகிவிட்டானே என்ற கவலை சிவராமனை வருத்தியது. அதனுல் நோயுற்றுப் படுத்தபடுக்கையானுர். அந்நிலையிலும் துருபதன் தன் தந்தைக்குத் தொண்டு செய்யாது ஊர்சுற்றினன்.

சுகுணன் விடுமுறை பெற்றுவந்து, அவருக்குப் பணி செய்தான். ஒருநாள் சிவராமனின் ஆவி பிரிந்தது. சுகுணன் உள்ளம் உருகித் தேம்பித் தேம்பி அழுதான். ஆனால் அவர் பெற்ற பிள்ளை ஒருதுளி கண்ணீராவது சிந்தவில்லை.

தந்தை இறந்ததும் துருபதன் தன்னெண்ணப்படி நடக்கத் தலைப்பட்டான். தந்தை தேடிய பெரு நிதியைத் தண்ணீராய் இறைத்தான். தன் தீய நண்பர்களோடு கூடிக் குடிப்பதும் சூதாடுவதுமே அவனது வேலைகளாக மாறின. ஈற்றில், தானிருந்த பெரிய மாளிகையையும் விற்றான். அந்தப் பணத்தையும் நண்பர்கள் வஞ்சகமாகக் கவர்ந்து கொண்டனர். அவன் உண்ண உணவும் உடுக்க உடையும் படுக்க இடமுமின்றி அலைந்தான். அதனால், பிறர் பொருளைத் திருடத் தொடங்கினான். பலநாட் திருடன் ஒருநாள் அகப் பட்டான். ஒருநாள் அவன் கையும்மெய்யுமாகப் பிடி பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டான். அதனைக் கேள்விப்பட்ட சுகுணன் ஓடோடிவந்தான். துருபதனுக்கு விதிக்கப்பட்ட குற்றப்பணம் முழுவதையுங் கட்டி அவனை மீட்டான். துருபதன் சுகுணனைக் கட்டித் தழுவி மன்னிப்புக் கேட்டான். அதன்பின் துருபதன் நல்லவனாக மாறி வியாபாரத்தில் ஈடுபட்டான். இப்போது மட்டுநகரிலுள்ள பெரிய மனிதர்களிலே துருபதனும் ஒருவன்.

# 19

## தெரு விபத்து

குறிப்புக்கள் :

1. விபத்தைக் காணற்குரிய சந்தர்ப்பம்.
2. விபத்து நடந்த இடம்.
3. வாகனங்களின் நிலை.
4. காயமடைந்தோர் நிலை.
5. கூடி நின்றவர் பேச்சுக்கள் ; செய்த உதவி.

ஒருநாள் மாலையில் நான் பாடசாலையினின்றும் வீடு நோக்கி வீதி வழியாகச் சென்றேன். அவ் வீதியில் ஒரு வளைவு இருந்தது. அது டகர வடிவில் அமைந்திருந்தது ; அதனால், அபாயகரமானது. அப்பொழுது என்னைக் கடந்து ஒரு மோட்டார் வண்டி மிக வேகமாகச் சென்றது. அடுத்த கணம் ‘ படார் ’ என்றொரு பெருஞ் சத்தங் கேட்டது. நான் அந்த இடத்தை நோக்கி விரைந்து சென்றேன்.

அங்கே நான் கண்ட காட்சி என்னைத் திடுக்கிடச் செய்தது. சிறிதுநேரம் திகைத்து நின்றேன். அத்தகைய பயங்கரக் காட்சி அது. நான் இதற்கு முன் அத்தகைய

பயங்கரக் காட்சியைக் கண்டதில்லை. அந்த அபாய கரமான வளைவில் மோட்டார் வண்டி வேகத்துடன் திரும்பியது. அதே சமயம் மறுபக்கத்திலிருந்து வசு வண்டி ஒன்று வந்தது. ஒன்றை ஒன்று காணவில்லை. அன்றியும் வசுவண்டியின் குழலொலியை மோட்டார்ச் சாரதி அவதானிக்கவில்லை. மிக அண்மையிலேதான் அவை ஒன்றை ஒன்று கண்டன. மோட்டார்ச் சாரதி யால், தன் வண்டியின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடிய வில்லை. வசுச் சாரதியோ மோட்டார் வண்டியைக் கண்டதும் வசு வண்டியை நிறுத்தினன். ஆனல், வந்த வேகத்தில் மோட்டார் வண்டி வசுவண்டியில் மோதி விட்டது. இந்த விபத்து கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்து முடிந்தது.

வசுவண்டி பயில்வானைப் போன்று கம்பீரமாக நின்றது. ஆனல் அதனுடன் மோதிய மோட்டார் வண்டி மிகுந்த சேதமடைந்திருந்தது. வசுவண்டியின் முன்பக்கத்திலே சில இடங்களிலே நசிவுகள் ஏற்பட் டிருந்தன. ஆனல், எந்திரத்தில் எவ்வித பழுதும் இல்லை. மோட்டார் வண்டியோ திருத்த முடியாத வகையிற் சேதமடைந்திருந்தது. அதன் விளக்குகளாகிய கண்கள் உடைந்து குருடாய்விட்டன. எந்திரமுள்ள முற்பகுதி நசிந்தும் உடைந்தும் உருக்குலைந்து காணப்பட்டது. முன்புறக் கண்ணுடி பொடிப்பொடியாய்ச் சிதறி விட்டது. அதன் உடல் அலங்கோலமாக வளைந்திருந்தது. சிறிது நேரத்தின் முன் அது கண்கவர் வனப் புடையதாய் விளங்கியது. இப்போதோ உருக்குலைந்து அலங்கோலமாய்க் கிடந்தது.

வசுவில் இருந்த பிரயாணிகளுக்கு எவ்வித காயமு மில்லை. ஆனல், மோட்டாரிற் பிரயாணஞ் செய்தவர் களில் மூவர் அபாயகரமான நிலையில் இழுத்தெடுக்கப் பட்டனர். அம் மூவரில் இருவருக்கு மண்டையிற் பலத்த அடிவிழுந்திருந்தது. அதனல், அவர்கள் அறிவு நினை வற்றுப் பிணம்போலக் கிடந்தனர். ஒருவருக்குக் கால்களிலொன்று முறிந்து தொங்கியது. அவர் இரத்த

வெள்ளத்திற் கிடந்து துடிதுடித்தார் ; வேதனை தாங்காமல் அலறினர். ஆனல், ஒருவர் மாத்திரம் தெய்வச் செயலாய் ஆபத்தின்றித் தப்பினர்.

அப்பொழுது அங்கே மக்கள் பெருந்திரளாய்க் கூடிவிட்டனர். எல்லோருந் தாம் தாம் விரும்பியபடி பேசிக்கொண்டனர். சிலர் வசுச் சாரதியைப் பாராட்டினர் ; சிலர் அவனைத் தூற்றினர். சிலர் மோட்டார்ச் சாரதிக்காக அனுதாபப்பட்டனர். சிலர் இந்த வளைவிலே இந்த வேகத்திலே சென்றிருக்கக்கூடாது என அபிப்பிராயந் தெரிவித்தனர். சிலர் அவன் குடிபோதையில் இருந்தான் என ஏசினர். சிலர் இக்காலச் சாரதிகளின் அலட்சியப் போக்கைப் பற்றிப் பேசினர். ஒருவர் தாம் கண்ட வீதி விபத்தைப் பற்றி வருணித்தார். எல்லோரும் பேசிக்கொண்டிருந்தனரே யன்றி ஒருவராவது செய்யவேண்டியதைப்பற்றி உணரவில்லை.

எனக்கு அங்கு நிற்பவர்கள் செய்வன சரியெனத் தோன்றவில்லை. அதனல் நான் மிக விரைவாக அயலிலுள்ள நகர்காவலர் நிலையத்துக்கு ஓடினேன். அவர்களுக்கு அந்த விபத்தைப்பற்றி அறிவித்தேன். அவர்கள் தாமதமின்றி அந்த இடத்துக்கு வந்தனர். காயமடைந்தோரை வைத்திய நிலையத்துக்கு அனுப்பினர். விபத்தைப்பற்றிய எல்லாக் குறிப்புக்களையுங் குறித்துக் கொண்டனர். அதன்பின் வசுவண்டியை ஓடவிட்டனர். அந்த விபத்தை இப்போது நினைத்தாலும் என் உடல் நடுங்குகிறது.

# 20

## உரையாடல்

### (விடுமுறையைக் கழித்த முறை)

குறிப்புக்கள் :

1. ஆரம்பம்.
2. விடுமுறையைக் கழித்த இடம் எதுவென்பது.
3. அவ்விடத்தின் பலவகைச் சிறப்புக்கள்.
4. முடிவு.

தேவி : வணக்கம், இராணி.

இராணி : வணக்கம், தேவி.

தேவி : இராணி, விடுமுறையில் உன்னைக் காணமுடிய வில்லையே ; எங்கு சென்றிருந்தாய் ?

இராணி : நான் கண்டிக்குச் சென்றிருந்தேன். விடு முறையை அங்குதான் கழித்தேன்.

தேவி : ஓ, அப்படியா? அங்கு யாருடன் தங்கியிருந்தாய் ?

இராணி : கண்டியில் என் பெரிய மாமா வீட்டிலே தங்கி யிருந்தேன். அவர் அங்குள்ள இலங்கை வங்கியிற் பணிபுரிகிறார்.

**தேவி:** கண்டி எழில் நிறைந்த நகரம் என என் அண்ணு கூறினர். உண்மைதானு இராணி?

**இராணி:** ஆம்; உண்மைதான் தேவி. இலங்கையிலுள்ள எழில் நிறைந்த நகரங்களுள் ஒன்று கண்டி. அதனைச் சூழ்ந்து வானுற ஓங்கிய பல மலைகள் உண்டு. அவையெல்லாம் மரகத நிறப் பட்டு உடுத்தது போன்று பசுமையுடன் விளங்குகின்றன. அம்மலைகளின் நடுவே கண்டி நகர் அமைந்திருக் கிறது. தலதா மாளிகையும் அதை யடுத்துள்ள வாவியும் கண்கொள்ளாக் காட்சியளிக்கின்றன.

**தேவி:** தலதா மாளிகையிலேதானே புத்தரின் புனிதத் தந்தம் வைக்கப்பட்டிருக்கிறது, இல்லையா இராணி.

**இராணி:** ஆம்; அங்குதான் அது போற்றிக் காக்கப் படுகிறது. தலதாமாளிகை புத்தசமயத்தவரின் புனிதத் தலங்களுட் சிறந்தது. நாள்தோறும் புத்த சமயிகள் அங்குவந்து, மலர் தூவி வணங்கிச் செல் கிருர்கள்.

**தேவி:** நீ அங்கு போயிருந்தாயா, இராணி.

**இராணி:** போகாமல் இருப்பேனு? சென்ற பூரணை நாளன்று அங்கு சென்றேன். பூரணை பௌத்தரின் சிறந்த திருநாள். அது போயாநாட்களிற் சிறந்தது. அன்று வெண்ணிறஆடை அணிந்த பலர் மலர்த் தட்டைக் கையிலேந்தி நிரைநிரையாக வந்து வணங்கினர். அயலிலே ஒரு பெரிய மண்டபம் இருக்கிறது. அது சிற்பவேலைப்பாடுகள் நிறைந்தது. புத்தபிக்குகள் அங்கிருந்து சமயபோதனை செய் கிருர்கள்.

**தேவி:** கண்டிதானே பழைய சிங்கள மன்னர்களின் தலைநகரம்; இல்லையா இராணி.

**இராணி:** ஆமாம்; அதைப்பற்றிச் சொல்ல மறந்து விட்டேனே. கண்டியரசர்களின் அரமனை தலதா மாளிகையின் அயலில் இருக்கிறது. இன்னெரு புறத்தில் ஒரு நூதனசாலை உண்டு. அங்கே சிங்கள மக்கள் உபயோகித்த பழைமையான பல பொருள் கள் இருக்கின்றன. சிங்கள மன்னர்களின் ஆடை யணிகள் அங்கு பாதுகாக்கப்படுகின்றன. பழைய

போர்க்கருவிகள் எல்லாவற்றையும் அங்கே காணலாம்.

தேவி: அப்படியா? ......... அவசியம் பார்க்கவேண்டிய இடந்தான். சரி, வாவி ஒன்று உண்டு என்ருயே?

இராணி: ஆமாம்; நகரின் மத்தியிலே அஃது அமைந்திருக்கிறது. எப்பொழுதும் அதில் நீர்நிறைந்து காணப்படுகிறது. அதன் மத்தியில் ஒரு சிறு தீவு உண்டு. அங்கே அழகிய சிறிய மண்டபம் ஒன்று காட்சியளிக்கிறது. பழைய சிங்கள மன்னர்கள் மாலை வேளையில் அங்கே தங்கிப் பொழுதுபோக்குவார்களாம். இரவிலே மின்விளக்கொளியிலே அந்த வாவி அற்புதக்காட்சி அளிக்கிறது.

தேவி: நல்லது இராணி. பேராதனைப் பூந்தோட்டத்துக்குச் சென்ருயா?

இராணி: ஒரு நாள் மாமாவுடன் அங்கு சென்றேன். அது மிகமிகப் பெரிய பூந்தோட்டம். உலகிலுள்ள மரஞ்செடி கொடிகள் எல்லாம் அங்கு வளர்கின்றன. நாங்கள் கண்டு கேட்டறியாத பல மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. எல்லாவற்றையும் கலையழகோடு அமைத்திருக்கிருர்கள். எங்கு நோக்கினும் மலர்களின் சிரிப்பு; மரங்களின் நிறைவு; அங்கே சென்ருல் திரும்பிவரவே மனம் வராது.

தேவி: இராணி, நீ இலங்கைப் பல்கலைக் கழகத்தைப் பார்த்தாயா?

இராணி: ஒருநாள் மாமா என்னை அங்கு அழைத்துச் சென்ருர். மலைச்சரிவுகளிலும் பள்ளங்களிலும் மிகப்பெரிய கட்டிடங்கள் காணப்படுகின்றன. அஃது ஒரு சிறு நகரம் போலத் தோன்றுகிறது. அங்கே தானே உன் அண்ணன் படிக்கிருர்?

தேவி: ஆம்; அங்கேதான் படிக்கிருர்......... இராணி, அதோ மணிச் சத்தம் கேட்கிறது. வகுப்புக்குப் போவோம் வா.

967

CHUNDIKULI GIRLS' COLLEGE
JAFFNA

6.50
6.50
12.50
12.00
10.00

50.50
20.50

70.80

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்